


Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, JUNE 14, 2021

செவ்வாய்க்கிழமை ஜூன் 14, 2022 | ஒளி: 08 கதிர்: 022 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | Free

**கலகம் செய்ய விரும்புவோர் 'தாங்கள் என்றைக்காவது இறப்போம்' என்பதை அறிவதில்லை. அறிந்தால் அவர்கள் கலகம் செய்வதை நிறுத்தி விடுவார்கள்.**
**(தர்மபோதனை)**

## உரிய அரசியல் மாற்றங்கள் இடம்பெற்று வருகின்றன

### ஜெனீவாவில் வெளிவிவகாரத்துறை அமைச்சர் தெரிவிப்பு



எதிர்காலத்திற்கான நிலையான அடித்தளமாக, பரந்த அடிப்படையிலான அரசாங்கத்தின் ஊடாக தேசிய பிரச்சினைகளுக்கு ஒருமித்த அணுகுமுறையை ஜனாதிபதியும் பிரதமரும் கோரியுள்ளனர். புதிய பிரதமரின் நியமனம் மற்றும் பல கட்சிகளை உள்ளடக்கிய புதிய அமைச்சரவையின் நியமனம் ஆகியவற்றுடன் அரசியல் மாற்றங்கள் இடம்பெற்று வருகின்றன என வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று (13) ஜெனீவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 50வது அமர்வில் வெளிவிவகாரத்துறை அமைச்சர் உரையாற்றுகையில் இதனை தெரிவித்தார். தொடர்ச்சி P2

வெளிப்புற சாட்சியங்கள் சேகரிப்புப் பொறிமுறை

# நாட்டை பிளவுபடுத்தும்

### ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் 50வது அமர்வில் மீண்டும் வலியுறுத்தினார் பீரிஸ்

வெளிப்புற சாட்சியங்கள் சேகரிப்புப் பொறிமுறையை இலங்கை நிராகரிப்பதனை கடந்த காலத்தில் நான் தெளிவுபடுத்தினேன். இந்தப் பொறிமுறையானது துருவப்படுத்துவதற்கும் பிளவுபடுத்துவதற்கும் மட்டுமே உதவும் அதேவேளை, இந்தச் சபை மற்றும் அதன் உறுப்பினர்களின் வளங்களில் பயனற்ற மற்றும் உதவியற்ற வீண் நிலையை ஏற்படுத்தும் என்ற எமது நம்பிக்கையை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகின்றோம் என வெளிவிவகாரத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். தொடர்ச்சி P2



## அரிசி விற்றால் அபராதம்

அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர் ஒருவருக்கு எதிராக ஒரு இலட்சம் ரூபாய் முதல் 05 இலட்சம் ரூபாய் வரை அபராதம் விதிக்க முடியும் என்று நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதேபோன்று குறித்த வர்த்தகருக்கு எதிராக 06 மாத சிறைத் தண்டனையை விதிப்பதற்கான இயலுமையும் உள்ளதென நுகர்வோர் விவகார மற்றும் தகவல் பணிப்பாளர் அசேல பண்டார தெரிவித்துள்ளார். தொடர்ச்சி P2

கோப் குழுவில் சர்ச்சை கருத்து

## இ.மி.ச தலைவர் இராஜினாமா


### புதிய தலைவராக நாலிந்த இலங்ககோன் நியமனம்



இலங்கை மின்சார சபையின் தலைவர் எம்.எம்.சி ஃபெர்டினாண்டோ தனது இராஜினாமா கடிதத்தை சமர்ப்பித்துள்ளார் என்றும் அக்கடிதத்தை ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, நேற்று (13) தெரிவித்தார்.

மேலும், இலங்கை மின்சார சபையின் பிரதித் தலைவர் நாலிந்த இலங்ககோன், சபையின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். தொடர்ச்சி P2

## கொழும்பு, புறநகரில் இன்:.புளுயன்சா



கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளில் இன்ஃபுளுயன்சாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருவதாகவும் குழந்தைகளிடையே விரைவாக பரவுவதாக அறிக்கைகள் கிடைத்துள்ளதாகவும் குழந்தைகள் நல வைத்தியர் டொக்டர் தீபல் பெரேரா தெரிவித்தார். தொடர்ச்சி P2

## 17 ஆம் திகதி இறுதிக்கப்பல் வரும்

எதிர்வரும் 17 ஆம் திகதியே இலங்கைக்கான இறுதி எரிபொருள் கப்பல் அனுப்பிவைக்கப்படும் எனவும், அதற்கு பின்னர் எந்தவொரு எரிபொருள் கப்பலும் இலங்கைக்கு வருமா என தமக்கு தெரியாது , அதுகுறித்த எந்தவித அறிவிப்பும் தூதரகத்துக்கு அறிவிக்கப்படவில்லை எனவும் இந்திய பிரதி உயர் ஸ்தானிகர் தன்னிடம் தெரிவித்ததாக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார். தொடர்ச்சி P2




இந்த ஆண்டு இறுதியிலேயே

## ஐ.எம்.எப்பின் கடன் உதவி கிடைக்கும்

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று எதிர்வரும் சில நாள்களில் இலங்கைக்கு வருகை தரவுள்ள நிலையில் அவர்களுடன் செய்துகொள்ளும் உடன்படிக்கைகள் குறித்து அரசாங்கம் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது. ஐ.எம்.எப்புடன் தற்போது பணியாளர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டாலும் கூட இந்த ஆண்டு இறுதிக் காலப்பகுதியிலேயே தொடர்ச்சி P2

டொக்டர் ஷாபி ஷிஹாப்தீன்

## தனது சம்பள நிலுவையை நன்கொடையாக வழங்கினார்



குருநாகல் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றிய மகப்பேற்றியல் நிபுணரான டொக்டர் ஷாபி ஷிஹாப்தீன், தனக்கு வழங்கப்பட்ட சம்பள நிலுவையான 26 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாயை அத்தியாவசிய மருந்துப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான நன்கொடையாக வழங்கத் தீர்மானித்துள்ளார். தொடர்ச்சி P2

இந்தியாவின் அழுத்தத்தால் சட்டத்தை திருத்தினால்

## தேசிய பாதுகாப்பும் ஆபத்தை எதிர்நோக்கும்

### தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியம் ஜனாதிபதிக்குக் கடிதம்

இந்தியாவின் அழுத்தம் காரணமாக மின்சார சட்டத்தை திருத்துவதன் மூலம் எரிசக்தி பாதுகாப்பு மாத்திரமின்றி தேசிய பாதுகாப்பும் ஆபத்தை எதிர்நோக்கும் என்றும் இதுதொடர்பில் ஆராய்ந்து அதனை சீராக்குவது தங்களது தேசிய பொறுப்பு என தெரிவித்து, தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது. அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: இலங்கை மின்சார சபையின் முன்னாள் தலைவர், பாராளுமன்ற கோப் குழுவில் அளித்த வாக்குமூலத்தின் ஊடாக, இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் அழுத்தம் காரணமாகவே மின்சார சட்டம் திருத்தம் செய்யப்பட்டுள்ள உண்மை வெளியே வந்துள்ளது. தொடர்ச்சி P2



## பிரதான உதவிகளை பெற சீனாவுடன் பிரதமர் பேச்சு

### நெருக்கடியில் இருந்து மீள ஒன்றரை ஆண்டுகள் செல்லும் என்கிறார்

இலங்கைக்கு தேவையான பிரதான உதவிகளைப் பெறுவதற்காக சீனாவுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகத் தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தற்போதைய நெருக்கடியிலிருந்து இலங்கை மீள்வதற்கு ஒன்றரை வருடங்கள் செல்லும் என்றும் தெரிவித்தார்.

இந்திய ஊடகமொன்றுக்கு நேற்று (13) வழங்கிய விசேட செவ்வியிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு சீனா ஓரளவு உதவுவதாகத் தெரிவித்த பிரதமர், இந்தியாவுடன் இணைந்து பணியாற்றுவதால், கிடைக்க வேண்டிய பிரதான உதவிகள் கிடைக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டினார். தொடர்ச்சி P2

எரிபொருள் பற்றாக்குறைக்குள்

## கூப்பன் எப்படி

### காஞ்சனவிடம் கேள்வி




நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில், கூப்பன் முறையில் எரிபொருள் வழங்கும் நடைமுறை குறித்து, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவிடயம் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நேற்று (13) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே மேற்குறிப்பிட விடயத்தை அவர் தெரிவித்தார்.

சில எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு இரண்டு வாரங்கள் வரை டீசலைப் பெறவில்லை என்றும் கூப்பன் முறையில் எரிபொருளை வழங்குவதற்கான அமைச்சரின் தொடர்ச்சி P2

## பொறுப்புக்கூறலை உறுதி செய்யவேண்டும்

### மிச்சேல் பேச்லெட் இலங்கை அரசாங்கத்திற்கு வலியுறுத்து



இலங்கை அரசாங்கம், மிகவும் புறக்கணிக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கான உடனடி நிவாரணத்தை உறுதி செய்யுமாறும், நிர்வாக ரீதியில் அதிக வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கும், நல்லிணக்கம் மற்றும் நீதியை முன்னெடுப்பதற்கும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் மிச்சேல் பேச்லெட் வலியுறுத்தியுள்ளார். தொடர்ச்சி P2



இலங்கைக்கு கைகொடுப்பது குறித்து

## சீன- அமெரிக்க தூதுவர்கள் கலந்துரையாடல்

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் மற்றும் இலங்கைக்கான சீன தூதுவர் குய் சென் ஹாங் ஆகியோருக்கு இடையில் நேற்று (13) சந்திப்பொன்று இடம்பெற்றிருந்தது. கொழும்பில் அமைந்துள்ள சீன தூதரகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பின் போது, இலங்கையின் நிகழ்கால பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி நிலைமைகள் குறித்து கலந்துரையாடியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமைகளில் சீனா மற்றும் அமெரிக்கா ஆகிய இரு தரப்பும் ஒன்றிணைந்து எவ்வாறு ஒத்துழைப்புகளை வழங்குவது என்பது குறித்தும், வர்த்தகம், தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# உரிய அரசியல் மாற்றங்கள் இடம்பெற்று வருகின்றன

அரசியலமைப்பின் 21வது திருத்தத்தின் தேவை, பாராளுமன்றம், சுயாதீன நிறுவனங்கள் மற்றும் நிறைவேற்று அதிகாரங்களின் மீதான சரிபார்ப்பு மற்றும் சமநிலை ஆகியவற்றில் உள்ள அடிப்படை ஜனநாயக விழுமியங்களை ஒருங்கிணைப்பதற்காக, அனைத்து கட்சிகளின் ஒருமித்த கருத்தை உருவாக்குவதில் ஈடுபட்டுள்ளோம்.

நாட்டின் அண்மைய இடையூறுகளின் போது, சட்டம் மற்றும் பொது ஒழுங்கைப் பேணுதல் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை தடையின்றி விநியோகிக்க அனுமதிக்கும் ஒரே நோக்கத்திற்காக வரையறுக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு மற்றும் அவசரகால விதிமுறைகள் விதிக்கப்பட்டன. மே 9ஆந் திகதி நடைபெற்ற சம்பவங்கள் மற்றும் அதன் பின்விளைவுகள் தொடர்பாக முழு அளவிலான விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் இந்த சம்பவங்கள் தொடர்பில் சுயாதீன விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

பொருளாதாரத்தின் முக்கிய அம்சத்தில், நிலைமையை உறுதிப்படுத்தவும், மக்களுக்கு அத்தியாவசியமானவற்றை வழங்கவும், சர்வதேச நாணய நிதிய ஆதரவுத் திட்டத்திற்கு வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படும் நடவடிக்கைகளை உருவாக்குகின்றோம். முன்னோக்கிச் செல்வதில், உள்நாட்டு மற்றும் சர்வதேச பங்காளிகள் உட்பட அனைத்து பங்குதாரர்களுடனும் உரையாடுகின்றோம். நமது பொருளாதாரத்தை மீண்டும் நிலையான அபிவிருத்திப் பாதையில் வைப்பதற்கும், உணவு, உரம், எரிசக்தி மற்றும் மருந்துகள் போன்ற தேவைகளை வழங்குவதற்கும் ஒரு ஒத்திசைவான கட்டமைப்பை ஒன்றிணைத்து வருகின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கொழும்பு, புறநகரில் இன்:.புளுயன்சா

இந்த நோயின் அறிகுறிகளாக காய்ச்சல், உடல் வலிகள், இருமல், சளி ஆகியவை காணப்படும் என்று தெரிவித்த அவர், முன்னர் கொவிட் 19உடன் தொடர்புடையது என்றாலும் தற்போது பலர், இன்ஃபுளுயன்சாவால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது அடையாளம் காணப்பட்டுள்ளது என்றார்.

இது குழந்தைகளிடையே எளிதில் பரவக்கூடும் என்பதால், குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் கைகளை தவறாமல் கழுவுமாறும், குறிப்பாக வகுப்பறைகள், பாலர் பாடசாலைகள், வைத்திசாலைகள் மற்றும் பொது போக்குவரத்து சேவைகளைப் பயன்படுத்தும் போது முகக்கவசம் அணியுமாறும் வலியுறுத்தியுள்ளார்.

இன்ஃபுளுயன்சாவால் பாதிக்கப்பட்ட எவரும் அதிகளவிலான இயற்கை பானங்கள் அருந்துவதுடன், பரிந்துரைக்கப்பட்ட பரசிட்டமோல் எடுத்துக்கொள்வதுடன், ஓய்வு எடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

காய்ச்சலைக் குறைக்க சுடு நீரும் பயன்படுத்தப்படலாம் எனவும் சுவாசப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் அல்லது கடுமையாக நோய்வாய்ப்பட்டுள்ளவர்கள் மருத்துவ சிகிச்சை பெற வேண்டும் என்று குறிப்பிட்டார்.

# இ.மி.ச தலைவர் இராஜினாமா

பொது நிறுவனங்கள் தொடர்பான பாராளுமன்றக் குழுவில் (கோப்) கடந்த வெள்ளிக்கிழமை (10) தெரிவித்த கருத்தை வாபஸ் பெறுவதாக எம்.எம்.சி. பெர்டினான்டோ அறிவித்திருந்தார்.

கடந்த நவம்பர் மாதம் 24 ஆம் திகதி ஜனாதிபதி, தன்னை அழைத்து இந்த செயற்றிட்டத்தை அதானி நிறுவனத்திடம் வழங்குமாறு தெரிவித்ததாக கோப் குழுவில் ஆஜராகிய போது அவர் குறிப்பிட்டிருந்ததுடன், இந்திய பிரதமர் நரேந்திர மோடி இது தொடர்பில் ஜனாதிபதிக்கு அழுத்தம் விடுத்ததாகவும் குறிப்பிட்டிருந்தார்.

500 மெகாவோட் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை உற்பத்தி செய்யவதற்காக அதானி கிரீன் எனர்ஜி லிமிடெட் உடன் முன்மொழியப்பட்ட மன்னார் மற்றும் பூனேரி காற்று மற்றும் சூரிய சக்தி திட்டம் தொடர்பாக குழுவில் வெளியிட்ட கருத்து தொடர்பிலேயே அவர் மன்னிப்பும் கோரியிருந்தார்.

எனினும், நேற்று முன்தினம் இது குறித்து கோப் தலைவருக்கு எழுதிய கடிதத்தில் எதிர்பாராத அழுத்தம் மற்றும் உணர்ச்சிகளின் காரணமாக இந்திய பிரதமரால் வலியுறுத்தப்பட்டது என்ற வார்த்தைகளை உபயோகித்ததாகவும் அதை வாபஸ் பெறுவதாகவும் எம்.எம்.சி ஃபெர்டினாண்டோ தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சீன- அமெரிக்க தூதுவர்கள் கலந்துரையாடல்

முதலீடு மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை எவ்வாறு முன்னெடுப்பது என்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது. அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்வதற்கான இலங்கையின் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும் இரு தரப்பினரும் கலந்துரையாடியதாக இரு நாடுகளில் தூதரகத்தின் உத்தியோகபூர்வ ட்விட்டர் பக்கத்தில் பதிவேற்றப்பட்டுள்ளது.

# நாட்டை பிளவுபடுத்தும்

நேற்று (13) ஜெனீவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 50வது அமர்வில், பேரவையில் அறிக்கையொன்றை சமர்ப்பித்து உரையாற்றுகையில் வெளிவிவகாரத்துறை அமைச்சர் இதனை தெரிவித்தார்.

கடந்த கூட்டத்தின் பின்னர், பயங்கரவாதத் தடைச் சட்டம் திருத்தப்படும் என மனித உரிமைப் பேரவையில் நான் உறுதியளித்த பின்னர், பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான சட்டத்தை நாடாளுமன்றத்தில் முன்வைத்து, அது நிறைவேற்றப்பட்டது. இந்தத் திருத்தங்களின் ஒட்டுமொத்த விளைவு, தற்போதுள்ள சட்டத்தில் கணிசமான முன்னேற்றத்தையும், ஆழமான தாக்கத்தையும் ஏற்படுத்துவதோடு, இலங்கையில் மனித உரிமைகள் மற்றும் மனித சுதந்திரங்களுக்கான காரணத்தை மேலும் அதிகரிக்கும்.

நிலையான அபிவிருத்தி இலக்கு 16 உட்பட இலங்கை கணிசமான முன்னேற்றத்தை அடைந்துள்ளது. மேலும், காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம், அதன் சரிபார்ப்பு செயன்முறையின் ஒரு பகுதியாக, விசாரணைக் குழுவிற்கு அழைக்கப்பட்ட 83% க்கும் அதிகமான நபர்களை சந்தித்துள்ளது. இழப்பீடுகளுக்கான அலுவலகம், தற்போதைய பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும், ஆரம்ப ஒதுக்கீடான ரூபா. 759 மில்லியனுக்கும் மேலதிகமாக, ரூபா. 53 மில்லியனை ஒதுக்கியுள்ளது.

யுத்தத்தின் பின்னர் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட 92% க்கும் அதிகமான தனியார் நிலங்கள் முறையான உரிமையாளர்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 8,090 உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் தொடர்பாக, சட்டமா அதிபர் உயர் நீதிமன்றங்களுக்கு பல குற்றப்பத்திரிகைகளை அனுப்பியுள்ளதோடு, அது தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. இலங்கையானது பலதரப்புக் கட்டமைப்பில் பங்குபற்றுவதுடன், எமது மக்களுக்கு நீதி மற்றும் சமத்துவத்துடன் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் சர்வதேச சமூகத்துடனும் மனித உரிமைகள் பேரவையுடனும் நெருங்கிய ஈடுபாட்டை தொடர்கின்றது. எனக் குறிப்பிட்டார்.

# தேசிய பாதுகாப்பும் ஆபத்தை எதிர்நோக்கும்

இது தொடர்பில் தங்களுக்கு இருக்கும் தொடர்பு குறித்தும் மின்சார சபையின் முன்னாள் தலைவர் காரணங்களை முன்வைத்துள்ள நிலையில், நீங்கள் ஊடக அறிவிப்பு ஊடாக அதனை நிராகரித்துள்ளமை மூலம் தவறு சரியாகி விடாது.

முன்னாள் தலைவர் தான் அப்போது முகம்கொடுத்த அழுத்தமே காரணமாகவே அவ்வாறான வாக்குமூலம் ஒன்றை கோப் குழுவில் முன்வைதத்தாக தெரிவித்தாலும் அதன்மூலம் அரசாங்கம் எடுக்கும் தீர்மானங்கள் தொடர்பிலும் அதற்கு பொறுப்பு கூறவேண்டியவர்கள் தொடர்பிலும் மக்களுக்கு பாரிய அவநம்பிக்கை ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி அதன்மூலம் தோன்றியுள்ள அரசியல் நெருக்கடியைப் பயன்படுத்தி இலங்கை அரசாங்கத்தை மண்டியிட செய்து தமது பூகோள அரசியல் ஒழுங்குப் பத்திரத்தை செயற்படுத்தவும் இந்திய அரசு செயற்பட்டு வரும் நிலையில், அரச தலைவர்கள் பொறுப்பு பாரதூரமான நிலையில் உள்ளது.

மின்சார சட்டத்தை திருத்துவதன் ஊடாக நிறைவேற்றிக்கொள்ள முயற்சிக்கும் நோக்கத்தைப் பார்க்குமிடத்து அது இந்தியாவின் அழுத்தத்தால் முன்னெடுக்கப்படும் செயற்பாடு என்பதை சந்தேகமின்றி ஏற்றுக்கொள்ள முடியும் என அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரதான உதவிகளை பெற சீனாவுடன் பிரதமர் பேச்சு

எனவே, நன்கொடையாளர் மாநாட்டில் சீனாவுடன் ஓர் உரையாடலை மேற்கொள்ள முயல்வதாகவும் விரைவில் அதை நடத்த விரும்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

1.5 பில்லியன் அமெரிக்க டொலர் நாணய மாற்றத்தை மேற்கொள்ள விடுக்கப்பட்ட கோரிக்கையை சீனா நிராகரிப்பதாக தெரிவித்த நிலையில், இலங்கைக்கு உதவ இந்தியா முன்வந்ததாக பிரதமர் தெரிவித்தார்.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த பிரதமர், மின்சார திருத்த சட்டமூலத்துக்கு எதிராக வாக்களித்தாகவும் 21ஆவது திருத்தத்தை படிப்பதற்கு அமைச்சரவையில் உள்ள உறுப்பினர்கள் விரும்பியதாகம் குறிப்பிட்டார்.

சில முன்னாள் அமைச்சர்கள், பொதுஜன பெரமுன மற்றும் ஏனைய கட்சி உறுப்பினர்கள் பிரதமர் பதிவியை ஏற்காமையால் அதை தான் ஏற்றுக் கொண்டதாகவும் குறிப்பிட்டார்.

தற்போதைய பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியை நிவர்த்தி செய்ய நாட்டின் அனைத்து அரசியல்வாதிகளும் ஒன்றிணைய வேண்டும் என்றும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்திலிருந்து பிணை எடுப்பதை அரசாங்கம் நாடுகிறது என்றாலும், நடந்துகொண்டிருக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண நன்கொடையாளர் முகவர் மற்றும் நட்பு நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக வலியுறுத்தினார்.

# பொறுப்புக்கூறலை உறுதி செய்யவேண்டும்

மனித உரிமைகள் பேரவையின் 50ஆவது கூட்டத்தொடர் நேற்று (13) ஜெனிவாவில் ஆரம்பமாகியது. பேரவையில் அறிக்கையொன்றை முன்வைத்துள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் மிச்சேல் பேச்லெட் இலங்கை குறித்து இவற்றை கூறியுள்ளார், அவரது அறிக்கையில் மேலும் கூறியுள்ளதானது,

இலங்கை அரசாங்கம், மிகவும் புறக்கணிக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கான உடனடி நிவாரணத்தை உறுதி செய்யுமாறும் அதேபோல் மீட்பு வேலைத்திட்டங்கள் குறித்த பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படும் வேளையில் சமூகப் பாதுகாப்பிற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் எனவும் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துகிறேன் எனவும் அவர் கூறியுள்ளார்.

# அரிசி விற்றால் அபராதம்

அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் மற்றும் விலைப் பட்டியலை காட்சிப்படுத்தாத வர்த்தகர்களுக்கு எதிரான சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மொனராகலை மற்றும் அனுராதபுரத்திலிருந்து 4,075 கிலோ கிராம் அரிசியை நுகர்வோர் விவகார அதிகார சபை கைப்பற்றியுள்ளது.

மொனராகலையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 2,575 கிலோகிராம் அரிசியை கைப்பற்றியதாகவும், அனுராதபுரத்திலிருந்து 1,500 கிலோ கிராம் அரிசி கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அதிகாரசபை, அரிசி தொகைளின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தது.

# தனது சம்பள நிலுவையை நன்கொடையாக வழங்கினார்

அவருடைய சம்பள நிலுவையை கடந்த வெள்ளிக்கிழமைக்கு (10) முன்னர் வழங்குவதாக சுகாதார அமைச்சு ஒப்புக் கொண்டிருந்த நிலையில், 9ஆம் திகதியன்று நிலுவைத் தொகைக்கான காசோலை வழங்கப்பட்டுள்ளது. அந்தத் தொகையையே நன்கொடையாக வழங்குவதற்கு டொக்டர் ஷாபி தீர்மானித்துள்ளார்.

குருநாகல் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றியபோது, பெண்களின் அனுமதியின்றி கருத்தடை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

சட்டவிரோதமான முறையில் பணத்தை சேர்த்தாகவும் பயங்கரவாத அமைப்புடன் தொடர்புகளைப் பேணுவதாகவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தார்.

அவர் மீது முன்வைக்கப்பட்ட எந்தவொரு குற்றச்சாட்டுகளும் இதுவரை நிரூபிக்கவில்லை என்று 2019ஆம் ஆண்டு ஜூலை மாதம் குருநாகல் நீதிமன்றத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அறிவித்தமைக்கு அமைய அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

தனக்கு வழங்க வேண்டிய சம்பளம் நிலுவை மற்றும் கொடுப்பனவுகளை வழங்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்குமாறு கோரி, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

தன்னிச்சையாகவும் சட்ட விரோதமாகவும் நியாயமான காரணமின்றி, தனது வேலையிலிருந்து கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டதாக அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.எம்.எப்பின் கடன் உதவி கிடைக்கும்

ஐ.எம்.எப்பின் கடன் உதவிகளை பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

பணியாளர் மட்டத்திலான குழுவினரின் பிரதான நோக்கம் இலங்கையின் பொருளாதார திட்டங்கள் எவ்வாறானது என்பதையும், அரச செலவீனங்களை குறைப்பதும், வருவாயை அதிகரிக்க இலங்கை அரசாங்கத்திடம் உள்ள வேலைத்திட்டங்கள் என்ன என்பது குறித்து ஆராயும் விதமாக அமையும் என கூறப்பட்டுள்ள நிலையில், ஐ.எம்.எப்பின் கடன் திட்டம் இந்த ஆண்டு இறுதியிலேயே கிடைக்கும் எனவும், அவர்கள் இலங்கைக்கு வந்து உடன்படிக்கை செய்துகொண்டாலும் கூட கடன்களை வழங்க வாய்ப்புகள் இல்லை எனவும் அரச மட்டத்தில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அவர்களின் கடன்களை பெற்றுக்கொள்ள முன்னர் இலங்கை அரசாங்கம் நிருவாக மட்டத்தில் பல்வேறு மாற்றங்களை செய்ய வேண்டிவரும். அது இலகுவானது அல்ல எனவும் பிரதமர் அரசு உயர் மட்ட உறுப்பினர்களுக்கு சுட்டிக்காட்டியுள்ளதாக தெரியவருகின்றது.

# கூப்பன் எப்படி

முன்மொழிவை கண்டனம் செய்வதாகவும் குறிப்பிட்ட அவர், இந்த முறைமை பொருளாதாரத்தை மேலும் சீர்குலைக்கும் என்றும் குறிப்பிட்டார்.

பொருளாதாரத்தை செயல்பட வைப்பதற்கு பொதுமக்களுக்கு எரிபொருள் தேவை என்றும் பொருளாதாரத்தை மேலும் சீர்குலைக்கும் முயற்சியில் அமைச்சர் செயல்படுகிறாரா என்றும் கேள்வி எழுப்பினார்.

பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் இடம்பெறும் ஊழல் அகற்றப்பட வேண்டும் எனவும் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க பொருத்தமான திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்றும் கூறினார்.

கூப்பன் முறையும் கறுப்புச் சந்தையை உருவாக்கும் என்று குறிப்பிட்ட அவர், நாட்டுக்கு எரிபொருளைப் பெறுவதற்கான திட்டத்தை அமுல்படுத்துமாறு அமைச்சரை வலியுறுத்தினார்.


இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை, ஶ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஆகியவை நாட்டுக்கு பாரிய இழப்புகளை ஏற்படுத்தி வருவதாகவும், இந்த நிறுவனங்களுக்கு அரசாங்கம் நிதியளிக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

# 17 ஆம் திகதி இறுதிக்கப்பல் வரும்

அதேபோல் எரிவாயு கப்பல் ஒன்றும் கடந்த ஐந்து நாட்களாக இலங்கை கடல் எல்லையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும், கப்பலுக்கு செலுத்த 10 மில்லியன் டொலர் எம்மிடம் இல்லை எனவும் தெரிவித்த அவர், இவ்வாறான நிலைமையில் அடுத்த மாதம் எமக்கு மிகப்பெரிய நெருக்கடி நிலையொன்று உருவாக்கப்போகின்றது என்றார்.

# பசிலை கைது செய்யுங்கள்

நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்கு காரணமாக இருந்த முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவை கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும் என சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தன தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.



ராஜபக்ஷ குடும்பத்தை இயக்கிய முக்கிய நபரான பசில் ராஜபக்ஷ எந்தவிதமான பொறுப்புகளும் இல்லாது அவரது ஊருக்கு திரும்பி சென்றுள்ளார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு காரணமான பசில் ராஜபக்ஷவை கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும். ஆனால், கடமை உணர்வு இல்லாது சிரித்துக் கொண்டே தான் வீட்டுக்கு செல்வதாக ஊடகவியலாளர் சந்திப்பில் பசில் கூறுகிறார். இது ஒரு கேலிக்குரிய விடயம் எனவும் அத்துரலிய ரத்தன தேரர் இதன்போது தெரிவித்தார்.

# புதிய பாதையில் பொன்சேகா எம்.பி

ஐக்கிய மக்கள் சக்தியின் தற்போதைய பிரதித் தலைவரான ஃபீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் தலைமையில் ஒரு புதிய கட்சியை உருவாக்குவதற்காக திட்டமிட்டு வருவதாக அரசியல் வட்டார தகவல்களின் மூலம் அறியமுடிகிறது.

நாட்டின் பாதுகாப்பு பிரிவில் சிரேஷ்ட பதவிகளை வகித்த பல முன்னாள் இராணுவ அதிகாரிகள் புதிய கட்சிக்கு ஆதரவளிக்க உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் தற்போதைய பயணம் குறித்து, பொன்சேகாவும் அவரது நெருங்கிய பங்காளிகளும் ஏமாற்றமடைந்துள்ளனர் என்றும் அறியமுடிகிறது.

இது தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவுடன் பல சுற்று கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன என்றும் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் திட்டத்துடன் கட்சியை ஆரம்பிப்பதற்கான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# உதவிக்கரம் நீட்டுவோம்

## வெளிவிவகார அமைச்சர் பீரிஸிடம் கட்டார் பிரதிப் பிரதமர் வாக்குறுதி

இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் இருந்து மீள, இலங்கைக்கு பல்வேறு வழிகளில் ஒத்துழைப்புகளை பெற்றுத்தருமாறு கட்டார் பிரதிப் பிரதமர் கலாநிதி காலித் பின் மொஹமட் அல் அத்தியாவிடம் வெளிவிவகாரத்துறை அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் கோரிக்கை விடுத்துள்ளார். இலங்கைக்கு சாத்தியமான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என கட்டார் பிரதிப் பிரதமர், அமைச்சரிடம் தெரிவித்தார்.

சிங்கப்பூரில் நடைபெற்ற '19ஆவது ஐ.ஐ.எஸ்.எஸ் ஷங்ரிலா' உரையாடலில் பங்கேற்க சிங்கப்பூர் சென்றிருந்த வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் பீரிஸ், கட்டார் பிரதிப் பிரதமர் கலாநிதி காலித் பின் மொஹமட் அல் அத்தியாவுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இதன்போது, இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியை எடுத்துக்காட்டிய அமைச்சர் பீரிஸ், பல்வேறு வழிகளில் கட்டார் அரசாங்கத்தின் ஆதரவையும் கோரியிருந்தார். மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட் ஆகியோர் டோஹாவிற்கு விரைவில் விஜயம் செய்வதற்கு வசதிகளை வழங்குமாறு கட்டார் பிரதிப் பிரதமரிடம் அமைச்சர் கோரிக்கை விடுத்தார். இலங்கைக்கு சாத்தியமான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என கட்டார் பிரதிப் பிரதமர் அமைச்சரிடம் தெரிவித்தார்.

அத்துடன் அமைச்சர் பீரிஸ், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான பிராந்தியப் பணிப்பாளர் திருமதி. கிறிஸ்டின் சிப்போலாவை சந்தித்து, இலங்கையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் மற்றும் எதிர்வரும் மாதங்களில், மனிதாபிமான உதவிகளை வழங்குவதில் இலங்கை செஞ்சிலுவை சங்கம் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் சாத்தியமான பங்களிப்புக்கள் ஆகியன குறித்தும் கலந்துரையாடினார்.

# ரணில் சிறையில் இருக்க வேண்டியவர்



மத்திய வங்கி ஊழல் மோசடியில் ரணிலுக்கு எவ்வாறு தொடர்புள்ளது என்பதை, மத்திய வங்கியின் தற்போதைய ஆளுநர் நந்தலால் வீரசிங்க கோப் குழுவில் அம்பலப்படுத்தியிருந்தார் எனத் தெரிவித்த தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, ரணில் சிறையில் இருக்க வேண்டிய ஒருவர் எனவும் கூறினார்.

ஊழல்வாதி, நீதிமன்றத்தில் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்ட ஒருவர், நாட்டின் முக்கிய பதவி நிலையில் இருக்கிறார். இரண்டாவதாக இருப்பவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. இவரும் ஊழல்வாதி, நாட்டின் வளங்களை சொத்துகளை எந்தவித பொருளாதார அடிப்படையுமின்றி வெளிநாடுகளுக்கு விற்பனை செய்தவர் எனவும் இதன்போது தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரதமர் ரணிலுக்கும் அர்ஜூன மகேந்திரனுக்கும் மத்திய வங்கி ஊழலில் எவ்வாறு தொடர்பு உள்ளது என்பதை, தற்போதைய மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க, கோப் குழுவின் முன் பகிரங்கமாக வெளிப்படுத்தியிருந்தார். மத்திய வங்கியின் தற்போதைய ஆளுநர் நந்தலால் வீரசிங்க, ரணிலின் பிடியில் இருக்கிறார்.

பாராளுமன்றில் ரணிலின் அருகில் உள்ள பிரசன்ன ரணதுங்க குற்றவாளியென தீர்ப்பளிக்கப்பட்ட ஒருவர். அவருக்கு 2 கோடி ரூபாய் தண்டப்பணத்தை நீதிமன்றம் விதித்துள்ளது. இவ்வளவு அதிகமான தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதை நான் இப்போதே காண்கிறேன். குற்றவாளியென தீர்ப்பளிக்கப்பட்டவர், ஆளுங்கட்சி பிரதம கொறடாவாக இருக்கிறார். அவருக்கு அமைச்சுப் பதவியும் வழங்கப்பட்டுள்ளது. இந்த அரசியல் கலாசாரத்தால் நாட்டை ஒருபோதும் கட்டியெழுப்ப முடியாது எனவும் தெரிவித்தார்.

# டீசல் வரிசைக்கு அண்மையில் சடலம்



■ ரஸீன் ரஸ்மின், ஹிரான் பிரியங்கர ஜயசிங்ஹ

மதுரங்குளி நகரத்தில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு டீசல் பெறுவதற்காக காத்திருக்கும் வாகனங்களுக்கு அண்மையிலுள்ள கானில் இருந்து, இனந்தெரியாத சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

ஆண்ணொருவரின் சடலம் கிடப்பதாக, மதுரங்குளி பொலிஸாருக்கு நேற்று (13) காலை கிடைத்த தகவலை அடுத்தே சடலம் மீட்கப்பட்டுள்ளது.

எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் இருந்து 100 மீற்றர் தூரத்தில், டீசலை பெற்றுக்கொள்வதற்காக வரிசையில் நிறுத்தப்பட்டு இருக்கும் வாகனங்களுக்கு அண்மையிலுள்ள கானில் இருந்தே சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சடலம் கிடக்கும் இடத்துக்கு அண்மையில், ஜீப் வாகனத்துக்கு அருகில் உடைந்த போத்தல் துண்டுகளும் கிடந்துள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்ட நபர், டீசல் பெற்றுக்கொள்ள வந்தவரா? அல்லது வேறு நபரா என்பது தொடர்பில், நேற்று (13) மாலை வரையிலும் பொலிஸாருக்கு எந்தவிதமான தகவல்களும் கிடைக்கவில்லை.

நீர் நிரம்பிய அந்தக் கானில், குப்புற கவிழ்ந்திருக்கும் நிலையிலேயே சடலம் மீட்கப்பட்டுள்ளது. 40 வயது மதிக்கத்தக்க அந்த நபர், 5 அடி 6 அங்குலம் உயரம் கொண்டவர், காற்சட்டையும் ரி-சேர்ட்டும் அணிந்திருந்தார்.

எரிபொருள் வரிசையில் நிறுத்தப்பட்டிருக்கும் வாகனங்கள் பலவற்றின் உரிமையாளர்கள் அல்லது சாரதிகள், வாகனத்தின் கதவுகளை பூட்டிவிட்டு சென்றுவிடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர் எனத் தெரிவித்த மதுரங்குளி பொலிஸார், சடலம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.



# 'Food for Progress'

அமெரிக்க விவசாயத் திணைக்களத்தின் 'Food for Progress' எனும் முன்முயற்சியில் பங்கேற்கும் இலங்கை பாற்பண்ணையாளர்களின் பால் உற்பத்தியை இரட்டிப்பாக்குவதை நோக்கமாகக் கொண்ட 27 மில்லியன் டொலர் பெறுமதியான செயற்றிட்டம் தொடர்பாக, இலங்கை விவசாயத் திணைக்களத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அதில், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலீ சங் பங்கேற்றிருந்தார்.

# ஜனாதிபதிகளின் தவறான முடிவுகளாலேயே நெருக்கடி



தற்போதைய நெருக்கடி நிலைக்கு, 1990ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் இருந்து நாட்டை நிர்வகித்த ஜனாதிபதிகளின் தவறான முடிவுகளே வழிவகுத்தன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (13) இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

பங்களாதேஷ், வியட்நாம் போன்ற நாடுகள் சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் முன்னேறும் அதே நேரத்தில், உள்நோக்கக் கொள்கைகள் காரணமாக இலங்கை தற்போது தனிமையில் உள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

தற்போது இலங்கையை ஆதரிக்க மத்திய கிழக்கு நாடுகள் கூட விரும்பவில்லை. தற்போதைய நிலையின் போது கூட சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகள் இலங்கைக்கு தங்கள் ஆதரவை விரிவுபடுத்த வரவில்லை.

இலங்கைக்கு வெளிநாட்டு உதவிகளைப் பெறுவதற்கான ஒருங்கிணைப்பாளராக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட மாலைதீவுகளின் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீட் இதை உறுதிப்படுத்தி உள்ளதாக சுட்டிக்காட்டினார்.

இந்த ஆண்டு இறுதி வரை தற்போதைய பிரச்சினைகளை சமாளிக்க அரசாங்கம் போராடும் என்றும் குறிப்பிட்டார்.

# லிட்ரோ நிறுவனத்துக்கு புதிய தலைவர் நியமனம்

## அரச ஊடகங்களுக்கும் புதிய தலைவர்கள் நியமனம்

லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள முதித பீரிஸ், நாளை புதன்கிழமை (15) தனது கடமைகளை பொறுப்பேற்கவுள்ளார்.

லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவராக செயற்பட்ட விஜித ஹேரத், வெள்ளிக்கிழமை (10) தனது பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்திருந்த நிலையிலேயே, புதிய தலைவராக முதித பீரிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, அரச ஊடக நிறுவனங்களுக்கான புதிய தலைவர்களை அரசாங்கம், நேற்று (13) நியமித்தது.

வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன, தனது அமைச்சில் வைத்து நியமனங்கள் குறித்து, நேற்று (13) அறிவித்தார்.

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவராக அசங்க பிரியநாத் ஜெயசூரியவும் சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பின் புதிய தலைவராக வரலத் கணகாதிகாரி கணகா அமரசிங்கவும் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் தலைவராக ஹட்சன் சமரசிங்கவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஹம்பாந்தோட்டை துறைமுகம் மூலம்

# இலாபம் ஈட்டுவதற்கு அரசாங்கம் ஆர்வம்



ஹம்பாந்தோட்டை துறைமுகம் இன்னும் லாபம் ஈட்டவில்லை என்று தெரிவித்த துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, துறைமுகத்தின் மூலம் லாபத்தை ஈட்டுவதில் அரசாங்கம் ஆர்வமாக உள்ளது என்று தெரிவித்தார்.

ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு நேற்று (13) மேற்கொண்ட கண்காணிப்பு சுற்றுப் பயணத்துக்குப் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே, மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் நடவடிக்கைகள், தனியார் மயமாக்கப்பட்ட போதிலும், இலங்கை துறைமுக அதிகார சபை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறிப்பிட்ட அவர், ஒரு சிறிய வருமானம் ஈட்டப்படுகிறது என்றும் கூறினார்.

எவ்வாறாயினும், ஊழியர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு சிரமங்கள் உட்பட வருமானத்தை ஈட்டுவது தொடர்பான கலந்துரையாடல்கள் நேற்று நீண்ட நேரம் நடத்தப்பட்டதாக குறிப்பிட்டார்.

துறைமுகத்தைச் சுற்றியுள்ள முதலீட்டாளர்களை அதிகரிக்க முயற்சிகள் நடந்து வருவதாகவும் பல்வேறு கைத்தொழில் வலயங்களுக்கும் வெளிநாட்டு முதலீடுகளுக்கும் 500 ஏக்கர் நிலம் கிடைத்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

எரிபொருள் நெருக்கடி

# பௌசர்கள் பெறும் எரிபொருளில் வீழ்ச்சி

எரிபொருள் நெருக்கடி காரணமாக பௌசர்களுக்கு வழங்கப்படும் எரிபொருள் தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலிய தனியார் பௌசர் உரிமையாளர்கள் சங்கத்தின் இணைச் செயலாளர் சாந்த சில்வா தெரிவித்தார்.

பெற்றோலை விட டீசல் தொகையில் வீழ்ச்சியை காணமுடிவதாக குறிப்பிட்டுள்ள அவர், எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அதிக திறனில் விநியோகத்தை மேற்கொள்ள முடியாதுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

பெற்றோல் மற்றும் டீசல் விநியோகத்துக்காக 300 தொடக்கம் 350 பௌசர்கள் தேவைப்படும் நிலையில் தற்போது, 100 முதல் 150 வரையான வாகனங்களே சங்கத்தால் அனுப்பப்படுவதாக சுட்டிக்காட்டினார்.

கேள்விக்கு ஏற்ற விநியோகம் இடம்பெறாதமையே எரிபொருள் வரிசைகள் நீள்வதற்கு காரணமாகும்.

இதேவேளை, கொழும்பு உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளில் எரிபொருள் மற்றும் எரிவாயுவை பெற்றுக்கொள்வதற்காக மக்கள் நேற்றும் நீண்ட வரிசைகளில் காத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சிறுபான்மையினர் முன்னேறக் கூடாது என்பதற்காக

# இராணுவம் குவிப்பு

■ பாறுக் ஷிஹான்

தமிழர்கள் போன்றே முஸ்லிம்களும் முன்னேறக் கூடாது என்பதற்காக, இராணுவத்தை வடக்கு, கிழக்கில் குவித்துள்ளனர். இலங்கை இராணுவத்தின் கட்டமைப்பில் 20 டிவிசன்கள் இருக்குமாயின் அதில் 16 டிவிசன்கள் வடக்கு, கிழக்கில் இருக்கின்றன என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தற்போதைய சூழ்நிலையிலும் கூட, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இராணுவத்துக்கான எந்தவொரு வளமும் குறைக்கப்பட மாட்டாதென கூறி இருக்கின்றார். இது இனவாதத்தின் ஒரு விளைவாகும் என்றார்.

அம்பாறை மாவட்டம், பாண்டிருப்பு காந்திஜீ விளையாட்டு கழகத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, நேற்றுமுன்தினம் (12) மாலை இடம்பெற்ற நிகழ்வில்




கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

"எனக்கு 20 வருட அரசியல் அனுபவம் உண்டு. இந்த நாட்டில் பொருளாதார வீழ்ச்சியை அரசாங்கம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றது. இந்த அரச கட்டமைப்புக்குள் உள்ள மக்கள் எவ்வாறு சிரமங்களை எதிர்கொள்வார்கள் என்பதை நாம் அவதானிக்கலாம். கடந்த 30 வருடங்களாக இலங்கை அரசாங்கம், தமிழர்களின் பொருளாதாரத்தை திட்டமிட்டு போரால் அழித்தது.பின்னர் போர் நிறைவுற்ற 13 வருடங்களின் பின்னரும், தமிழருக்கு இந்த நிலை தொடர்ந்தது என்றார்.

பல்வேறு கட்டமைப்புகளுடன் தமிழர்களை 74 வருடங்களாக அழித்த அரசாங்கம், வங்குரோத்து நிலைமைக்கு சென்றிருக்கின்றது. இந்த நாட்டில் வருடாந்த வரவு-செலவுத் திட்டத்தில் பாதுகாப்புக்கு 19 சதவீதம் ஒதுக்கப்படுகின்றது. அதில் வருடமொன்றுக்கு இராணுவத்தினரின் தேவைக்காக 13 சதவீதம் ஒதுக்கப்படுகின்றது.

பாதுகாப்பு செலவுக்கு ஒதுக்கப்படுகின்ற சதவீதத்தில் அரைவாசியே, கல்வி மற்றும் சுகாதார பிரிவுகளுக்கு ஒதுக்கப்படுகின்றது.

இலங்கை அரசாங்கம் தமிழர்களை அழிப்பதற்காகவே பாதுகாப்புக்கு இவ்வாறு முக்கியத்துவம் கொடுக்கின்றது. தமிழர்கள் போன்றே முஸ்லிம்கள் முன்னேறக் கூடாதென இராணுவத்தை வடக்கு, கிழக்கில் குவித்துள்ளது" என்றார்.

# விறகுகளுடன் 8 லொறிகள் சிக்கின

■ மு.தமிழ்ச்செல்வன்

அனுமதியின்றி விறகுகளை ஏற்றிக்கொண்டு வந்த எட்டு லொறிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அந்த லொறிகளை செலுத்திவந்த சாரதிகளும் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி, ஆனையிறவு, பூநகரி, சங்குபிட்டி பகுதியில் வைத்து, நேற்று முன்தினம் (12) மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கைகளின் போதே, லொறிகள் கைப்பற்றப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மெதவலவுக்கு கிடைத்த தகவலையடுத்து, உதவி பொலிஸ் அத்தியட்சகர் இக்னு அஷார் தலைமையில் மாவட்ட மது ஒழிப்பு பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி குமாரசிங்க உள்ளிட்ட குழுவினரினால்



ஆனையிறவு வீதித்தடையில் வைத்து சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அனுமதியின்றி ஏற்றிவரப்பட்ட விறகுகளுடன் ஆறு வாகனங்களும் பூநகரி - சங்குப்பிட்டி பால வீதி தடையில் 02 வாகனங்களுமாக 08 வாகனங்கள் கைப்பற்றப்பட்டன. அதன் சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒதுக்கப்பட்ட காடுகளில் இருந்து பச்சை மரங்களை வெட்டி அனுமதி பத்திரம் இன்றி ஏற்றி வந்த குற்றச்சாட்டின் பேரிலேயே சாரதிகள் எண்மரும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்த கிளிநொச்சி பொலிஸார், அவர்களை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர்.



# 5,000 கிலோ கிராம் சுறா சிக்கியது

■ ஹஸ்பர்

கிண்ணியாவில் மீனவர்களின் வலையில் சிக்கிய 5,000 கிலோ கிராம் நிறை மதிக்கத்தக்க சுறா வகையைச் சேர்ந்த மீன் (Whale Shark) சிக்கியுள்ளது.

கிண்ணியா கடற்பரப்பில் மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர்களின் வலையில், இந்த மீன், நேற்றுமுன்தினம் (12) சிக்கியுள்ளது. அதனை பெரும் சிரமத்துக்கு மத்தியில் மீனவர்கள் கரைக்குக்கு கொண்டுவந்தனர்.

# கலன்களில் பெற்றோல் விநியோகம்



■ ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பு மாவட்டத்தில் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் நேற்று முன்தினம் (12) மாலை கலன்களில் பெற்றோல் விநியோகிக்கப்பட்டது.

ஆரையம்பதி பிரதான வீதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றிலேயே இவ்வாறு பெற்றோல் விநியோகிக்கப்பட்டது.

கலன்களுக்கு பெற்றோல் வழங்குவது கடந்த சில காலமாக தடை வீதிக்கப்பட்டிருந்தது. எனினும், ஜெனரேட்டர் பாவனையாளர்கள் மற்றும் தொழிற்சாலை தேவையுடையோரின் நன்மை கருதி, இவ்வாறு கலன்களில் பெற்றோல் வழங்கப்படுவதாக எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் தெரிவித்தார்.

# விழுந்த குழந்தை உயிரிழப்பு

கிளிநொச்சி, முழங்காவில் பகுதியில் கதிரையில் இருந்து கீழே விழுந்த ஒரு வயதான குழந்தை உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெற்றோர், குழந்தையை கதிரையில் இருத்தி விட்டு சமயலறையில் இருந்துள்ளனர். அதன்போதே கதிரையிலிருந்து குழந்தை தவறி விழுந்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

உடனடியாக குழந்தை, முழங்காவில் பிரதேச வைத்தியசாலைக்கு, கொண்டு செல்லப்பட்ட போது, வழியில் உயிரிழந்து விட்டதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.



# அரிசி ஆலைகளில் திடீர் சோதனை

■ மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை உத்தியோகத்தர்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் அரிசி ஆலைகள் மற்றும் அரிசி விற்பனை நிலையங்களில் திடீர் சோதனை நடவடிக்கைகளை நேற்று முன்தினம் (12) முன்னெடுத்திருந்தனர்.

இச் சோதனை நடவடிக்கையின் போது கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க கூடிய விலை பொறித்த அல்லது காட்சிப்படுத்திய அரிசி ஆலை உரிமையாளர், கூடிய விலையில் அரிசியை விற்பனை செய்த விற்பனையாளர் போன்றோருக்கு எதிராகவும் விலை காட்சிப்படுத்தாது அரிசி விற்பனையில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்தோடு எதிர்வரும் நாள்களிலும் அரிசி விற்பனை விலை தொடர்பான திடீர் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டு முறைகேடுகளில் ஈடுபடும் வியாபாரிகளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர்.

அதிகளவான நெல்லைக் இருப்பில் வைத்துள்ள போதிலும் அதனை அரிசியாக்கி சந்தைக்கு விநியோகம் செய்ய மறுக்கும் பதுக்கல் நடவடிக்கைகளுக்கு எதிராக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது எனவும் பொதுமக்கள் அரிசி கொள்வனவின் போது விலை தொடர்பில் அவதானம் செலுத்துவதுடன் முறைகேடான வியாபார நடவடிக்கைகள் தொடர்பில் மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைக்கு முறைப்பாடு செய்யுமாறும் அல்லது பாவனையாளர் அலுவல்கள்

அதிகார சபை துரித சேவை இலக்கமான 1977 ஊடாகவும் முறைப்பாடுகளை வழங்க முடியும் என்று பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர்.



## மடிப்பிச்சை...

வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த வைகாசி திருக்குளிர்த்தி சடங்கை ஒட்டிய மடிப்பிச்சை எடுக்கும் சடங்கு, நேற்று (13) திங்கட்கிழமை காலை இடம்பெற்றது. அதிகளவான பெண்கள் கலந்து கொண்டு மடிப்பிச்சை எடுத்து வந்தனர். (சகா)

# இராசதானியம் திட்டம் சங்கானையில் முன்னெடுப்பு

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் இராசதானியத் திட்டம், சங்கானையில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசிய பசுமை இயக்கம், சிறுதானியங்களின் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் 'சிறுதானியங்களுக்கு மீள முடிசூட்டுவோம்' என்று கருப்பொருளில் இராசதானியம் என்ற திட்டத்தை விவசாயக் கிராமங்களில் முன்னெடுத்து வருகிறது.

இதன் தொடர்ச்சியாகவே இத்திட்டத்துக்கான விதைகள் வழங்கும் நிகழ்ச்சி, சங்கானை, மடத்தடி விநாயகர் ஆலய முன்றலில் நேற்று முன்தினம் (12) இடம்பெற்றுள்ளது.

தி. சத்தியேந்திராவின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், பொருளாளர் க. கேதீஸ்வரநாதன் ஆகியோர் இராசதானியத் திட்டம் தொடர்பான கருத்துரைகளை வழங்கியிருந்தார்கள். ஓய்வுநிலைப் பிரதி விவசாயப்பணிப்பாளர் பொ. அற்புதச்சந்திரன் சிறுதானியங்களின் செய்கை முறைபற்றிய வழிகாட்டுதல்களை வழங்கியிருந்தார்.

இதன்போது ஐம்பது விவசாயிகளுக்குக் குரக்கன், காராமணி (கௌப்பி), பயறு ஆகிய விதைகள் வழங்கி வைக்கப்பட்டன. இலவசமாக வழங்கப்பட்ட விதைகளின் இரட்டிப்பு மடங்கு விதைகள் சுழற்சி முறையில் ஏனைய விவசாயிகளுக்கு வழங்கும்பொருட்டு, தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்திடம் கையளிக்க வேண்டும் என்ற புரிந்துணர்வின் அடிப்படையிலேயே இவ்விதைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

நாடு எதிர்நோக்கியுள்ள உணவுப் பஞ்சத்துக்கு முகங்கொடுக்கும் விதமாக அதிக நீரும், அதிக உரங்களும் தேவைப்படாத குறுகிய காலப்பயிர்களான சிறுதானியங்கள், அவரையினப் பயிர்களை உற்பத்தி செய்வதில் விவசாயிகள் தற்போது ஆர்வம் காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# பள்ளிவாசலுக்கு ஒலிபெருக்கி

■ நூருல் ஹுதா உமர்

அட்டாளைச்சேனை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட றஹ்மத் நகர், கச்சேனை மஸ்ஜிதுர் ரஹ்மா ஜும்ஆ பள்ளிவாசலுக்கு ஒலிபெருக்கி வழங்கிவைக்கப்பட்டது. ஒலிபெருக்கி தேவை தொடர்பில், அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனமான நிந்தவூர் பெஸ்ட் ஒப் யங் சமூக சேவைகள் அமைப்பிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இந்த வேண்டுக்கோளுக்கு இணங்க, நிந்தவூரைச் சேர்ந்த, கட்டார் நாட்டில் சிரேஷ்ட திட்ட முகாமையாளராக கடமையாற்றி வரும் அல்ஹாஜ் ஏ ஜிப்ரி, தனது மனைவி ஹாமிதுலெவ்வை பஸல்லனாவின் ஞாபகார்த்தமாக ஒரு லட்சம் ரூபாய் செலவில், இந்தப் பள்ளிவாசலுக்கு தேவையான ஒலிபெருக்கி வசதிகளை வழங்கி வைத்துள்ளார்.



ஹபாயா விவகாரம்

# அதிபருக்கு அழைப்பாணை

■ பாறுக் ஷிஹான், நூருல் ஹுதா உமர்

திருகோணமலை சண்முகா இந்துக் கல்லூரியில் ஹபாயா அணிந்து சென்றமைக்காக வெளியேற்றப்பட்ட ஆசிரியை பஹ்மிதா ரமீஸ், கல்லூரியின் அதிபர் லிங்கேஸ்வரி ரவிராஜனுக்கு எதிராக திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கில், அதிபருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் எழுத்து மூலக் கட்டளைக்கிணங்க கடந்த பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதி கல்லூரிக்கு கடமையேற்க சென்றிருந்த பஹ்மிதா றமீஸை கடமையேற்க விடாது பல குழப்பங்கள் விளைவிக்கப்பட்டிருந்தன.

அதுதொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கு ஒகஸ்ட் மாதம் 04ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு வருகின்றது. அன்றையதினம் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அதிபருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

நோயாளர் விடுதியில்

# கத்திக்குத்து; ஒருவர் கைது

■ ரொசேரியன் லெம்பட்

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் நோயாளர் விடுதியில் நேற்று (13) திங்கட்கிழமை அதிகாலை 1 மணியளவில் இடம்பெற்ற கத்திக் குத்து சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

வைத்தியசாலை நோயாளர் விடுதியில் சிகிச்சை பெற்று வந்த மன்னார், நொச்சிக்குளம் பகுதியை சேர்ந்த நபர் மீது கத்திக்குத்து தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தை அடுத்து, வைத்தியசாலை விடுதியில் தங்கியிருந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார்



முன்னெடுத்து வருகின்றனர்.

அண்மையில், நொச்சிக்குளம் பகுதியில் இரு சகோதரர்கள் வாள்வெட்டு தாக்குதலில் பலியாகிய நிலையில், நள்ளிரவில் நொச்சிகுளம் பகுதியை சேர்ந்த ஒருவர் கத்திகுத்துக்கு இலக்காகியுள்ளமை மன்னார் மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# மஹா கும்பாபிஷேகம்...



வத்துகாமம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம் புனராவர்தன அஷ்ட பந்தன பஞ்ச குண்டபக்ஷ பிரதிஸ்ட் மஹா கும்பாபிஷேகம் சர்வதேச இந்து மத குருபிடாவதி ஸ்ரீ ஐயப்பா தாச சாம்ப சிவா சிவாச்சாரியார், நித்தியானந்த சிவாச்சாரியார், சிவாச்சாரியார் சாம்ப சிவா மணிக்குருக்கள் மற்றும் சிவாச்சாரியர்கள் தலைமையில் கிரியைகள் நடைபெற்றன. பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துவது, மஹா கும்பம் ஊர்வலம், விமான கும்பாபிஷேகத்தையும் தேர்த்திருவிழாவையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: எஸ். ராமதாஸ்)































### இறக்குவானை–டிப்டீன் பாடசாலை கட்டடங்கள்

# விஷமிகளால் சேதம்

■ எம். குமார்

இனந்தெரியாத நபர்களால் இறக்குவானை, டிப்டீன் பாடசாலை கட்டடங்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பாடசாலையிலுள்ள மலசல கூடம் சேதமாக்கப்பட்டுள்ளதுடன், மலசலகூடத்தில் இருந்த மூன்று கதவுகளும் திருடி செல்லப்பட்டுள்ளன. மேலும், பாடசாலையில் உள்ள ஆசிரியர் விடுதியின் கதவு, மின்சார உபகரணங்களும் திருடி செல்லப்பட்டுள்ளன.





குறித்த பாடசாலை மண் சரிவால் பாதிக்கப்பட்டுள்ளதால், பாடசாலை கல்வி நடவடிக்கைகள், கடந்த இரண்டு மாத காலமாக தற்காலிகமாக தோட்ட ஆலயத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையிலேயே இனந்தெரியாதவர்களால் பாடசாலை கட்டடம் சேதமாக்கப்பட்டு, பொருட்களும் திருடிச் செல்லப்பட்டுள்ளன.

பாடசாலை விடுமுறையின் பின்னர், கடந்த ஆறாம் திகதி அதிபர் அந்த பாடசாலைக்கு சென்று பார்வையிட்ட போதே, கட்டடங்கள் சேதமாக்கப்பட்டு, பொருட்கள் களவாடிச் செல்லப்பட்டுள்ளதை கண்டுள்ளார். பின்னர் கோட்டக்கல்விக் அதிகாரியிடம் சம்பவம் தொடர்பில் முறையிட்டதுடன், நிவித்திகல வலயப் பணிமனை ஊடாக பொத்துபிட்டிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து, பொத்துபிட்டிய பொலிஸ் நிலைய அதிகாரிகள் பாடசாலைக்கு வருகைத் தந்து, விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.



### மண்ணெண்ணெய்க்காக

# 10 நாள் தவம்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

கொட்டகலை நகரிலுள்ள சிபெட்கோ எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு அருகில், மண்ணெண்ணெயைக் கொள்வனவு செய்வதற்காக, 10 நாள்கள் காத்திருக்கின்றனர்.

தற்போது மலையகத்தில் நிலவும் சீரற்ற வானிலையையும் பொருட்படுத்தாது மக்கள் அதிகாலை தொடக்கம் பகலிரவாக மண்ணெண்ணெய்க்கு காத்திருக்கின்றனர்.

எப்போது மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படும் என எரிபொருள் நிரப்பு பணியாளர்கள் உரியமுறையில் அறிவித்தால், தாம் வரிசைகளில் நின்று அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

### பிபிலை பஸ் தரிப்பிட காணி விவகாரம்:

# ஐவரடங்கிய குழு நியமனம்

■ சுமணசிறி குணதிலக

பிபிலை பஸ் தரிப்பிடத்துக்கு அருகில் காணியில் அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்கும் போது, குறித்த காணி உரிமம் தொடர்பில் ஏற்பட்ட முரண்பாடு தொடர்பான கலந்துரையாடல் ஊவா மாகாண ஆளுநர் அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

குறித்த சர்ச்சை தொடர்பான கண்காணிப்பு மற்றும் பரிந்துரைகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் பிபிலை பிரதேச செயலாளர் யூ.என். வீரசிங்கவின் தலைமையில் ஐவர் அடங்கிய விசேட குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

குறித்த குழுவானது ஒரு மாதத்துக்குள் அது தொடர்பான அறிக்கையை கையளிக்க வேண்டும் என்றும் ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில் இந்தக் கலந்துரையாடலின் போது, அறிவுறுத்தியுள்ளார். இந்தச் சிக்கல் நிலை தொடர்பில் பொதுமக்களுக்கான சேவையை உரிய முறையில் நிறைவேற்ற முடியாமல் இருப்பதுடன், அரச வருமானமும் இழக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் ஆளுநரின் செயலாளர் எம். எம். விஜயநாயக்க, மாகாண போக்குவரத்து மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட பல அதிகாரிகள் கலந்துகொண்டனர்.



### “கடமை செய்ய முடியவில்லை”

# அதிகாரிகள் புலம்பல்

■ டி.ஷங்கீதன்

டீசல் தட்டுப்பாடு காரணமாக தங்களுடைய கடமைகளை முன்னெடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக நுவரெலியா நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையின் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

நுவரெலியா மாவட்டத்தில் அனைத்து வர்த்தக நிலையங்களிலும் பொருட்களின் விலைகள் அளவுக்கு அதிகமாக விற்பனை செய்யப்படுகின்றன. செயற்கையாக தட்டுப்பாடுகள் எற்படுத்தப்பட்டு அதிக விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

இது தொடர்பாக வர்த்தகர்களிடம் கேள்வி கேட்டால் விரும்பினால் வாங்குங்கள்; விருப்பம் இல்லாவிட்டால் வேறு எங்காவது சென்று வாங்கிக் கொள்ளுங்கள் என்ற அதிகார தோரணையிலேயே அவர்கள் வாடிக்கையாளர்களுக்கு பதில் வழங்குகின்றார்கள்.

ஒரு விலைக்கு மேல் பல விலைகள் ஒட்டப்பட்ட லேபல்கள். யாரும் கேள்வி கேட்க முடியாத ஒரு நிலைமை. இது தொடர்பாக நுவரெலியா நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு தகவல் கொடுத்தாலும் அவர்களால் கடமையை செய்ய முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது. டீசல் தட்டுப்பாடு காரணமாக அவர்களுடைய வாகனங்களை செலுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

# தென்னக்கும்பரவில் பதற்றம்

கண்டி, தென்னக்கும்பரவில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு முன்பாக பதற்றமான நிலைமையொன்று நேற்று (13) ஏற்பட்டிருந்தது.

இதனால், கண்டியிலிருந்து தென்னக்கும்புரவை கடந்து செல்லவேண்டிய வாகனங்கள் வரிசையில் நின்றிருந்தன. அதேபோல, தென்னக்கும்பரவை கடந்து கண்டிக்கு வரவேண்டிய வாகனங்களும் வரிசையில் நின்றிருந்தன. வாகனங்களில் இருந்தவர்கள் சிலமணிநேரம் அசௌகரிங்களுக்கு உள்ளாகியிருந்தனர்.

அங்குள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் மண்ணெண்ணெய் பெறுவதற்காக, வரிசையில் மக்கள் காத்திருந்த போதிலும். வரிசையில் நிற்காத சிலருக்கு மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டது. அதனையடுத்தே, வரிசையில் நின்றிருந்தவர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் பதற்றமான நிலைமையொன்று அங்கு ஏற்பட்டிருந்தது.

### சேலை பட்டி கழுத்தில் இறுகிய நிலையில்

# 8 வயது சிறுமி சடலமாக மீட்பு

■ ஆ.ரமேஸ்

கந்தப்பளை, ஹைபொரஸ்ட் இலக்கம்-1 தோட்டப் பாடசாலையில் மூன்றாம் தரத்தில் கல்வி பயிலும், காவியா என்றழைக்கப்படும் இராஜமாணிக்கம் விசாந்தினி, சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வீட்டு வாசல் கூரையில், சேலை பட்டியில் கழுத்து இறுகியவாறு சிறுமி சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம், நேற்று முன்தினம் (12) காலை 8.45 மணியளவில் இடம்பெற்றதாக ஹைபொரஸ்ட் பொலிஸார் தெரிவித்தனர்.

தனது வீட்டு முற்றத்தில் சிறுமி விளையாடி கொண்டிருந்ததாகவும் தான் மலசலகூடத்துக்கு சென்றிருந்ததாகவும் தாயார் தெரிவித்துள்ளார்.



மலசலக்கூடத்திலிருந்து வெளியே வந்து பார்த்த போது, சிறுமியின் கழுத்து சேலையில் இறுகியிருந்துள்ளதை அவதானித்து, கூக்குரலிட்டு அயலவர்களை அழைத்துள்ளார்.

இதையடுத்து சிறுமியின் கழுத்தில் இறுகியிருந்த சேலை பட்டியை அப்புறுப்படுத்திய அயலவர்கள், சிறுமியை ஹைபொரஸ்ட் பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

எனினும் பரிசோதித்த வைத்தியர், சிறுமி ஏற்கெனவே உயிரிழந்துள்ளதாக தெரிவித்ததை தொடர்ந்து பிரேத பரிசோதனைக்காக சிறுமியின் சடலம் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

ஹைபொரஸ்ட் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# உள்ளொன்று வைத்து புறமொன்றைக் காண்பிக்கும் அரசாங்கம்

தென்னிலங்கை ஆட்சியாளர்கள் மீது நம்பிக்கையில்லையென வடக்கு, கிழக்கு தமிழ்த்தரப்பினர் பல்லவியாக பாடிக்கொண்டிருப்பதையும் படித்துப்படித்து கூறுவதையும் அப்பட்டமாகவே உறுதிப்படுத்தும் வகையில், முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர் மலை விவகாரம் அமைந்திருக்கிறது.

ஆட்சிப்பீடமேறும் எந்தவோர் அரசாங்கமும் இரண்டு அகப்பைகளிலேயே பகிர்ந்துள்ளன என்பதில் மாற்றுக் கருத்தில்லை. சட்டமும் அவ்வாறே செயற்பட்டு உள்ளது. பெரும்பான்மையின மக்களுக்கும் அதிகாரத்தில் கீழ் உள்ளவர்களுக்கும் பாகுபாடான சட்டமே அமல்படுத்தப்படுகின்றது.

'கோட்டா கோ கம', 'மைனா கோ கம' ஆகியவற்றின் மீது தாக்குதல்கள் நடத்துவதற்கு ஏதுவாக இருந்தவர்கள் என, சந்தேகநபர்களாக பெயர்குறிப்பிடப்பட்ட முக்கிய புள்ளிகளுக்கும் போக்குவரத்துப் பொலிஸாரை தூசன வார்த்தைகளால் வசைபாடிய அரசியல்வாதிகளின் பிள்ளைகளுக்கும் பிணை வழங்கப்பட்டுள்ளது.

எனினும், மாத்தறையில் ஏப்ரல் மாதம் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது, பொலிஸ் ஓட்டோவை சேதப்படுத்தினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு மாத்தறை நீதவான் நீதிமன்றம் மூன்றரை ஆண்டுகள் சிறைத்தண்டனையும் ஆறாயிரம் ரூபாய் அபராதமும் 50 ஆயிரம் ரூபாய் தண்டப்பணத்தையும் விதித்துள்ளது.

அரச சொத்துகளுக்குச் சேதம் விளைவித்தல், தண்டனைக்குரிய குற்றமாகும். ஆனால், இதற்கு முன்னர் இடம்பெற்ற சம்பவங்களுடன் தொடர்புடைய எந்தவொரு நபருக்கும் இவ்வாறு தண்டனை விதிக்கப்படவில்லை.

அதேபோல்தான், நீதிமன்றத்தால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழர்களின் பூர்வீக வழிபாட்டு இடமான குருந்தூர் மலையில், 'கபோக்' கல்லினாலான புத்தர் சிலையை நிர்மாணிப்பதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. தமிழர்களின் கடுமையான எதிர்ப்பால் அந்த முயற்சி கைவிடப்பட்டது. தொல்பொருள் ஆராய்ச்சி எனும் முகத்திரைக்குள் இருந்துகொண்டு புத்தர் சிலையை வைத்து வழிபட்டபோது, அங்கு விஹாரை கட்டுவதற்கு அடித்தளமிடப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கைச் சேர்ந்த மக்கள், பொருட்களின் விலை அதிகரிப்புக்கு எதிராகப் போராட்டங்களை நடத்தவில்லை. யுத்தக்காலத்தில் தென்னிலங்கை அரசாங்கங்களால் விதிக்கப்பட்ட பொருளாதார தடைகளின் மூலமாக சொல்லொணா துன்பங்களை அனுபவித்து, மாற்றுப்பொருட்களை கையாளக் கற்றுக்கொண்டவர்கள். ஆகையால், தென்னிலங்கை தற்போது முகங்கொடுக்கும் நெருக்கடி, அவர்களுக்கு ஒன்றும் புதிதல்ல.

முட்டாள்தனமாக எடுக்கப்பட்ட முடிவுகளால் முழுநாடே சிக்கல்களுக்கு உள்ளாகிக்கொண்டிருக்கின்றது. ஆக, எதற்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்பதை அரச அதிகாரிகளே தீர்மானிக்க வேண்டும். இன,மத, பேதங்களையும் இனவாதத்தையும் ஓர் ஓரத்தில் வைத்துவிட்டு, எதிர்கால மேம்பாட்டுக்கான தீர்மானங்களை எடுக்க வேண்டும். இல்லையேல் குழப்பகரமான நிலைமையொன்றே ஏற்படும்.

புலம்பெயர் தமிழர்களிடம் உதவிக்கரம் நீட்டியிருக்கும் அரசாங்கம், தடைச்செய்யப்பட்ட பட்டியலில் இருந்து தடையை நீக்கவில்லை. ஆக, முதலீடு செய்ததன் பின்னர், விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்களென தடைச்செய்துவிட்டால் என்ற சந்தேகமும் நியாயமானது. ஆகையால், திறந்த மனதுடன் செயற்படுவதே அரசாங்கத்துக்கும் நல்லது; நாட்டுக்கும் நல்லது.



தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





21ஆவது திருத்தம்:

## பேசா மடந்தைகளாக முஸ்லிம் எம்.பிக்கள்

மொஹமட் பாதுஷா

யாராவது காணாமல் போய்விட்டால், 'இந்த நபரைக் காணவில்லை' என்று விளம்பரம் பிரசுரிப்பது போல, 'முஸ்லிம் தலைவர்கள், எம்.பிக்களை காணவில்லை' என்றும் 'முஸ்லிம் தலைவர்கள், எம்.பிக்களை சமூகம் தேடுகின்றது' என்றும் விளம்பரங்கள் பிரசுரிக்க வேண்டியுள்ளது.

இந்த விளம்பரங்களில், அவர்களது ஆளடையாளங்களைக் குறிப்பிட வேண்டுமாயின், பார்ப்பதற்கு நல்ல வாட்டசாட்டமாக இருப்பார்கள், வெள்ளை நிற ஆடை அல்லது கோட்சூட் போட்டிருப்பார்கள், நன்றாக வாய்ச்சவடால் விடுவார்கள், பொய்யை உண்மையைப் போல பேசுவதில் திறமையாளர்கள்... என்று குறிப்பிட முடியும்.

பொதுவாக, தொலைந்து போகின்றவர்களில் பல இரகமானவர்கள் இருக்கின்றார்கள். வழிதவறியதன் மூலம் தொலைந்து போகின்றவர்கள், சந்தர்ப்பம் பார்த்து நழுவிப் போகின்றவர்கள், உள்நோக்கத்துடன் ஒடிப் போகின்றவர்கள் என, வகைப்படுத்தப்படுத்த முடியும்.

முக்கியமான காலகட்டத்தில், செயற்பாட்டுத் தளத்தில் காணாமல் போய்விடுகின்ற முஸ்லிம் எம்.பிக்கள், இதில் எந்த இரகமானவர்கள் என்பது அவர்களுக்கும் தெரியும்; மக்களுக்கும் தெரியும்.

இலங்கை, தொடர் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றது. சின்னச் சின்ன அரசியல் மாற்றங்கள், நெருக்கடிகளில் இருந்து மக்களை ஓரளவுக்கேனும் மீட்டெடுக்கும் என்றும் புதிய பிரதமர் ஒரு 'மீட்பர்' ஆக இருப்பார் என்றும் நம்பியிருந்த மக்கள், 'சட்டிக்குள் இருந்து அடுப்புக்குள் விழுந்து விட்டோமா' என்று எண்ணுமளவுக்கே யதார்த்தங்கள் உள்ளன.

தேசிய அரசியலில் மக்களை உண்மையாக நேசிக்கின்ற, மக்களுக்கான திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கிய மஹதீர் மொஹமட்களோ அல்லது நாட்டின் நலனைப் பற்றி மட்டும் சிந்தித்த லீ குவான் யூகளோ இன்னும் அதிகாரத்துக்கு வரவில்லை.

ஆட்சியாளர்கள் உள்ளடங்கலாக பெருந்தேசிய தலைவர்கள் எல்லோரும், தமக்கான அரசியலையே செய்து கொண்டிருக்கின்றனர். இதுபோலத்தான், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் போன்ற கட்சிகளின் தலைவர்களும் அந்தக் கட்சிகளைச் சார்ந்த எம்.பிக்கள் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி, பொதுஜன பெரமுன கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முஸ்லிம் எம்.பிக்களும், செயற்பாட்டுக் களத்தில் இருந்து காணாமல் போயுள்ளனர்.

இலங்கையில், ஏதோ ஒரு வகையில் இதுவும் ஒரு நிலைமாறுகாலம் என்றே கருதலாம். இது நிலைமாறு காலமா? கஷ்ட காலத்தின் நீட்சியா என்பதை ரணில் விக்கிரமசிங்கவின் ஆளுகைதான் தீர்மானிக்கப் போகின்றது.

21ஆவது திருத்தத்தைக் கொண்டு வருவதற்கான வேலைகள் மும்முரமாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. பெருந்தேசியக் கட்சிகளும் அதன் தலைவர்களும் இதனை தம்முடைய நிகழ்கால, எதிர்கால அரசியல் அதிகாரத்துக்கான ஓர் ஏற்பாடாகப் பார்க்கின்றனர். தமக்குச் சாதகமானதை, இத்திருத்தத்தின் ஊடாகக் கொண்டு வர மனக்கணக்கு போடுகின்றனர்.

சிறுகட்சிகள், இதில் எவ்விதமான தாக்கம் தமக்கு ஏற்படும் என்பது பற்றி ஆராய்கின்றன. அதேநேரம், சிறுபான்மைக் கட்சிகள், இந்த உத்தேச திருத்தத்தின் முன்மொழிவுகள் தமிழ், முஸ்லிம், மலையக மக்களுக்கு எவ்வாறான சாதக பாதகங்களை ஏற்படுத்தலாம் என்பது பற்றி கவனம் செலுத்த வேண்டியுள்ளன.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்க் கட்சிகள் வழக்கம்போல, இத் திருத்தத்தை உன்னிப்பாக ஆராய்ந்து வருகின்றன. தமிழ் மக்களின் அபிலாஷைகளை இதற்குள் எவ்வாறு புகுத்தலாம்? தீர்வை நோக்கி நகர்வதற்கான முதற்படியாக 21ஆவது திருத்தத்தை பயன்படுத்தலாமா? என்ற எல்லைவரை சிந்திப்பதாகத் தெரிகின்றது.

ஒவ்வொரு நகர்விலும், தமிழ் மக்களின் விருப்பு வெறுப்புகள் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதற்காக, த.தே. கூட்டமைப்பு போன்ற அரசியல் அணிகள் கலந்தாய்வு செய்வதும், அதற்காக குரல் கொடுப்பதும் முன்மாதிரியான விடயம்.

மேலோட்டமாகப் பார்க்கின்ற போது, 21ஆவது திருத்தம் என்பது நிறைவேற்று அதிகாரத்தை நீக்குதல், இரட்டைப் பிரஜாவுரிமை பெற்றவர்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கு தடையிடுதல் போன்ற விடயங்களை உள்ளடக்கியதாகவே தோன்றுகின்றது.

ஆனால், அதனை இன்னும் விசாலமாக நோக்க வேண்டியுள்ளது. அதாவது, அரசியலமைப்பில் ஒவ்வொரு திருத்தத்துக்கும் ஒரு பிரதான நோக்கம் இருக்கும். அந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, வேறு சில உப திருத்தங்களையும் அரசியலமைப்பில் கொண்டு வரலாம்.

எனவேதான், உத்தேச திருத்தமும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயமாகப் பார்க்கப்படுகின்றது. குறிப்பாக, தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கான பாதையில், இது எவ்வாறான செல்வாக்கை செலுத்தும் என்பது பற்றித் தமிழ் அரசியல்வாதிகள் சிந்திக்கின்றனர்.

தமக்கு விரும்பிய ஏற்பாடுகளை இதில் உட்புகுத்துவது சாத்தியப்படாவிட்டால் கூட, உத்தேச திருத்தம் எவ்வகையிலேனும் தமிழ் மக்களின் உரிமைகளை, அவர்களின் எதிர்பார்ப்புகளை நசுக்கிவிடுவதற்கான ஒரு நகர்வாக அமைந்து விடக்கூடாது என்பதில் மிகக் கவனமாக உள்ளனர். இந்த அக்கறையும் கவனமும், முஸ்லிம் கட்சிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் ஏன் கொஞ்சம் கூட இல்லை என்பதைத்தான், இந்த பத்தி வினவுகின்றது.

பெரும்பான்மைக் கட்சிகளாலும் தமிழ்க் கட்சிகளாலும் மிக உன்னிப்பாக நோக்கப்படுகின்ற ஒரு முக்கிய திருத்தத்தை, முஸ்லிம் அரசியல் அணிகள் கண்டும் காணாதது போல் இருப்பதும், அதுபற்றிய தம்முடைய கருத்துகளை முன்வைக்காதிருப்பதும் மிக மோசமான ஒரு கையறு நிலையாகும்.

தேர்தல் காலத்தில் முஸ்லிம் தலைவர்கள், வேட்பாளர்கள், தாங்கள்தான் இந்தச் சமூகத்தின் காவலர்கள், மீட்பர்கள் என்பார்கள். உயிர் போனாலும் உரிமைக்காக குரல்கொடுப்போம் என்பார்கள். ஆனால், தேர்தல் முடிந்து, அவர்களுக்கு பதவி கிடைத்து விட்டால், இந்த வாக்குறுதிகள் எல்லாம் காற்றில் பறந்து விடுகின்றன. கடந்த தேர்தல்களிலும் இதுதான் நடந்தது, அடுத்த தேர்தலிலும் இதுதான் நடக்கப் போகின்றது.

பாராளுமன்ற உறுப்பினருக்கான வரப்பிரசாதங்களை பெறுகின்ற முஸ்லிம் எம்.பிக்கள், அதற்குக் கைமாறாக மக்கள் சார்ந்து பாராளுமன்றத்தில் குரல் கொடுப்பதில்லை. 20 பேர் பாராளுமன்றத்தில் இருந்தாலும், ஆறு மாதங்களுக்கு ஒரு தடவையேனும் முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷைகளை வெளிப்படுத்தி, காத்திரமாக உரையாற்றுவதை காணக் கிடைப்பதில்லை.

'பேரம் பேசும் அரசியல்' என்று சொல்லிக் கொண்டு, அவர்கள் பதவிக்காகவும் வேறு சிலவற்றுக்காகவும் சோரம் போயிருப்பதால், ஆளும் கட்சியில் இருந்தாலும் சரி, எதிரணியில் இருந்தாலும் சரி 'நாவிழந்து' போயிருக்கின்றார்கள்.

அரசியலமைப்பு திருத்தம் வந்தாலும், சட்டங்களில் திருத்தம் கொண்டு வரப்பட்டாலும் அதற்கப்பால் அரசியல் நகர்வுகள் கொண்டு வரப்பட்டாலும் இதில் தமக்கு, தமது கட்சிக்கு என்ன இலாபம் என்று யோசிக்கின்றார்களே தவிர, இதனால் சமூகத்துக்கு என்ன நடக்கும் என்று சிந்தித்து செயற்படுவதில்லை. அப்படிப்பட்ட யாரையும் எம்.பி.க்களாக முஸ்லிம்கள் தெரிவு செய்யவில்லை.

சுருங்கக் கூறின், ஆளும் கட்சியில் இருப்பவர்கள் அரசாங்கத்துக்கும் எதிரணியில் உள்ளவர்கள் எதிர்க்கட்சிக்கும் முட்டுக் கொடுப்பதையே கடந்த 25 வருடங்களாக செய்து வருகின்றார்கள். இதனால் அவர்கள் உழைத்திருக்கின்றார்கள். ஆனால், முஸ்லிம் சமூகம் இன்னும் அந்த இடத்திலேயே நிற்கின்றது.

மிக முக்கியமான காலகட்டத்தில் கொண்டு வரப்பட்டுள்ள முக்கியத்துவம் வாய்ந்த ஒரு திருத்தமாக, உத்தேச 21ஆவது திருத்தத்தை எல்லோரும் நோக்குகின்றனர். ஆனால், முஸ்லிம் எம்.பிக்கள் பேசாமடைந்தைகளாக இருக்கின்றனர்.

முன்னைய திருத்தங்களை ஆதரிப்பது அல்லது எதிர்ப்பது என்ற விடயத்தில், சமூகத்திற்கு அறிவூட்டாமலும் தாங்கள் தெளிவுபெறாமலும் முட்டாள்தனமாகச் செயற்பட்டதைப் போல, 21ஆவது திருத்தம் தொடர்பிலும் செயற்படப் போகின்றார்களோ என்ற நியாயமான சந்தேகத்தை இது ஏற்படுத்தியுள்ளது.

"21ஆவது திருத்தத்தின் இறுதி வரைவு கிடைக்கப் பெறவில்லை. கிடைத்தவுடன் ஆராய்ந்து, எமது கருத்தை, நிலைப்பாட்டை முஸ்லிம் தரப்பினர் வெளிப்படுத்துவார்கள்" என்று அவர்கள் பக்கத்தில் இருந்து கூறப்படுவதாக தெரிகின்றது.

அது சரிதான்! ஆனால், உத்தேச திருத்தத்தில் எதுவெல்லாம் இருக்கும் என்ற விடயம், இப்போது பொது அரங்கில் பரவலாகப் பேசப்படுகின்றது. இதைவிட அதிகமான இரகசிய தகவல்களும் எம்.பிக்களுக்குக் கிடைத்திருக்கும்.

எனவே, 21ஆவது திருத்தத்தில் எதுவெல்லாம் உள்ளடங்கி இருக்கலாம், உள்ளடக்கக் கூடாது என்பதை, முஸ்லிம் எம்.பிக்கள் இப்போது சொல்ல முடியும். அதைவிட முக்கியமாக, இத்திருத்தத்தில் முஸ்லிம்களுக்கு நன்மை தரக்கூடிய ஏதாவது ஒரு மிகச் சிறிய ஏற்பாட்டையாவது கொண்டுவர முடியும் என்றால், அதையும் கூட்டாக இணைந்து செய்ய வேண்டும்.

அவசரமாக 21ஆவது திருத்தத்தை கொண்டுவர முனைப்புக்காட்டப்படுகின்ற சூழலில், "கடைசி வரைபு கிடைத்தவுடனேயே கருத்துத் தெரிவிக்க ஆரம்பிப்போம். அதன் பின்னரே ஆராய்ந்து முடிவு எடுப்போம்" என்று முஸ்லிம் தலைவர்களும் எம்.பிக்களும் சொல்வதில் அர்த்தமில்லை.



## வாழ்வியல் தரிசனம்

எனது ஆன்மாவை, தென்றலுடன் வாசனைப் பூக்களும் வருடியபடி இருப்பதை உணர்கின்றேன். இறைவா! இது என்ன சுகம்! இந்த உயிருக்கு என்னென்ன புதுமைகள் துலங்குகின்றன. சிதறும் மழைத்துளிகளுடன் பன்னீரும் தெளிக்கப்படுகின்றது. வாசனைப் பொடிகளும் தூவப்படுகின்றனவே; அது ஏன்? விலகிக்கொள்ள முடியா வேட்கை.

உன் சன்னதிக்கு வரும்போது, சாதாரண உணர்வுடன்தான் வந்தேன். ஆனால், மக்களின் பக்தி உணர்வுகளுடன் அவர்களின் குடும்ப உறவுகளும் நெருங்கி நிற்கின்றபடி, தங்கள் விழிகளை மெலிதாக மூடிய காட்சிகள் என் மனத்துக்குள் புகுந்தன.

காட்சிகள் மெல்ல மெல்ல நகரும்போது, என் தேகம் முழுவதும் சிலிர்த்து, ஓசை கூட நெஞ்சத்தில் குளுமை கொள்வதை உணர்கின்றேன். விழிகள் மலர்ந்தன. சற்று நேரத்தில் அவைகளும் மூடிக்கொண்டன. என்னை அறியாமலேயே!

நெஞ்சம் மெல்ல மெல்ல விலகி, எங்கோ பறக்க ஆரம்பித்தது. வெற்றுத் தேகம் எடை இல்லாத காற்றுப் போலானேன். இறைவனின் இருப்பிடம் இங்கு இருப்பதும், இன்றுதான் எனது நெஞ்சம் காற்றோடு காற்றாக, பிரபஞ்சத்தை அளக்கப் புறப்பட்ட அனுபவம். பக்திக்குள் இத்தனை வித்தையா? இறைவா ... இணைகின்றேன் ஏற்றுக்கொள்!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### அறுவடைக்கு எரிபொருளை பெற்றுத் தருமாறு கோரிக்கை

கிளிநொச்சி, கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட புளியம்பொக்கனை, நெத்தலியாற்றுப் பகுதியில் கழிவு நீரைக் கொண்டு, தண்ணீர் பம்பிமூலம் 150 ஏக்கருக்கும் மேற்பட்ட பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கமநல சேவைகள் திணைக்களம் ஊடாகப் பெறப்பட்ட சேதன உரத்தை கொண்டு பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்டு, தற்போது அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது.

இந்த நிலையில், அறுவடை மேற்கொள்வதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னரே எரிபொருளை பெறுவதற்காக, வரிசையில் வாகனம் நிறுத்தப்பட்டும் எரிபொருள் பெற முடியாத நிலை காணப்படுவதாக விவசாயிகள் கவலை வெளியிடுகின்றனர்.

இன்னும் சில நாள்களுக்குள் எரிபொருள் கிடைக்கப்பெறாவிட்டால், நெற்கதிர்கள் சேதமடைந்து போய்விடும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே, தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமையை கருத்தில் கொண்டு, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், எமக்கு எரிபொருளை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

–யது பாஸ்கரன்



புதுடெல்லி




# ராகுல் காந்தி இரண்டு மணி நேரம் வாக்குமூலம்

## தொண்டர்களுடன் பேரணியாக சென்றார்

'நேஷனல் ஹெரால்ட்' பத்திரிகை தொடர்பான வழக்கு விசாரணைக்காக, புதுடெல்லியில் உள்ள அமலாக்கத் துறை அலுவலகத்தில், காங்கிரஸ் எம்.பி., ராகுல் காந்தி இன்று ஆஜராகி இரண்டு மணி நேரம் வாக்குமூலமளித்தார். காங்கிரஸ் தலைமை அலுவலகத்தில் இருந்து, தொண்டர்கள் புடைசூழ அமலாக்க துறை அலுவலகம் நோக்கி புறப்பட்டு சென்றார். சில இடங்களில் அமைக்கப்பட்டிருந்த தடுப்புகளையும் மீறி தொண்டர்கள் கோஷமிட்டபடி சென்றனர்.

ராகுலுக்கு 'சம்மன்' அனுப்பியதற்கு எதிர்ப்பு தெரிவித்து, நாடு முழுதும் அமலாக்கத் துறை அலுவலகங்கள் முன்னால், காங்கிரஸ் கட்சியினர் போராட்டம் நடத்த திட்டமிட்டுள்ளனர்.

புதுடெல்லியை தலைமை இடமாக வைத்து செயற்பட்ட 'நேஷனல் ஹெரால்ட்' பத்திரிகையை, 'யங் இந்தியா' என்ற நிறுவனம் 2010இல் விலைக்கு வாங்கியது. காங்கிரஸ் தலைவர் சோனியா, அவரது மகன் ராகுல் உள்ளிட்டோர் இயக்குநர்களாக உள்ள இந்த நிறுவனம், பத்திரிகையின் பங்குகளை வாங்கியதில் முறைகேடு நடந்துள்ளதாக, பா.ஜ.கவைச் சேர்ந்த சுப்பிரமணியன் சுவாமி வழக்கு தொடர்ந்தார்.




இதில் நடந்துள்ள பண மோசடி தொடர்பாக, அமலாக்கத் துறை விசாரித்து வருகிறது. இந்த வழக்கு தொடர்பாக, சோனியா மற்றும் ராகுல் ஆகியோரை நேரில் விசாரணைக்கு ஆஜராகும்படி அமலாக்கத் துறை அதிகாரிகள் சம்மன் அனுப்பினர்.

இதேவேளை, காங்கிரஸ் எம்.பி ராகுல் நேற்று (13) அமலாக்கத்துறையில் ஆஜராக உள்ள நிலையில்,புதுடெல்லியில் பல்வேறு இடங்களில் நான் சாவர்க்கர் அல்ல, ராகுல்', உண்மை வெல்லும்' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகள் வைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# நயன் – விக்கியின் அடுத்த பயணம்



லேடி சூப்பர்ஸ்டார் நயன்தாரா மற்றும் இயக்குநர் விக்னேஷ் சிவன் ஆகிய இருவருக்கும் ஜூன் 9ஆம் திகதி சென்னையில் திருமணம் நடந்த நிலையில், திருமணம் முடிந்த மறுநாளே திருப்பதி ஏழுமலையானை சென்று தம்பதிகள் தரிசித்தனர்.

பின் மீண்டும் சென்னை வந்து பத்திரிகையாளர்களை சந்தித்த நிலையில் தற்போது கேரளாவில் நயன்தாராவின் அம்மாவின் வீட்டிற்கு விருந்துக்கு சென்று உள்ளதாக தெரிகிறது. இதனையடுத்து நயன் - விக்கி தம்பதிகள் அடுத்ததாக தேனிலவுக்காக வெளிநாட்டுக்கு செல்ல இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

கேரள மாநிலத்தில் உள்ள கொச்சி சர்வதேச விமான நிலையத்தில் விமானத்திலிருந்து இறங்கி விக்னேஷ் சிவன், நயன்தாரா வெளியே வந்த போது எடுக்கபட்ட புகைப்படம் தற்போது இணையதளங்களில் வைரலாக வருகிறது.

கொச்சியில் நயன்தாராவின் அம்மா வீட்டில் புதுமண தம்பதிகளுக்கு விருந்து அளிக்கப்பட்டது என்றும், அதன் பின் கொச்சியில் உள்ள நட்சத்திர ஹோட்டல் ஒன்றிலும் சிறப்பு விருந்து தம்பதிகளுக்கு அளிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

வெளிநாட்டில் யாருமில்லாத தீவுகளை நயன்தாரா தேனிலவுக்கு தேர்வு செய்ததாகவும் அந்த தீவில் இருவரும் சுமார் இரண்டு வாரங்கள் வரை காலத்தை கழிக்க முடிவு செய்திருப்பதாகவும் கூறப்படுகிறது. ஹனிமூன் முடிந்து சென்னை திரும்பிய உடன் தான் அஜித்தின் அடுத்த திரைப்படத்துக்கான திரைக்கதை அமைக்கும் பணியை விக்னேஷ் சிவன் தொடங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# கதையின் நாயகியாக ஹன்சிகா

தமிழில் தற்போது மஹா, ரவுடி பேபி மற்றும் ஆர்.கண்ணன் இயக்கும் திரைப்படங்களில் நடித்து வருகிறார் ஹன்சிகா. இதைத்தொடர்ந்து ஆர்யா நடித்த கலாபக்காதலன் திரைப்படத்தை இயக்கிய இகோர் இயக்கும் திரைப்படத்தில் ஒப்பந்தமாகியுள்ளார்.

மஹா திரைப்படத்தைப் போலவே இந்தத் திரைப்படத்திலும் கதையின் நாயகியாக நடிக்கிறார் ஹன்சிகா. பிக்பாஸ் நிகழ்ச்சியின் டைட்டில் வின்னரான ஆரி வில்லனாக நடிக்கும் இந்தத் திரைப்படத்தில் ஜனனி துர்காவும் ஒரு முக்கிய வேடத்தில் நடிக்கிறார்.



ஜிப்ரான் இசையமைக்கும் இந்தத் திரைப்படத்தின் படப்பிடிப்பு தற்போது தொடங்கப்பட்டுள்ளது.



# கமல்ஹாசனுக்கு முதல்முறை

உலகநாயகன் கமலஹாசன் நடித்த 'விக்ரம்' திரைப்படம் ஜூன் மூன்றாம் திகதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியான நிலையில் கிட்டத்தட்ட அனைத்து ஊடகங்களும் இந்த படத்தை கொண்டாடினர்.

தமிழ் திரையுலகினர் மட்டுமின்றி தென்னிந்திய திரையுலகினர்களும், வட இந்திய திரையுலகினர்களும் கமல்ஹாசனுக்கும் படக்குழுவினர்களுக்கு பாராட்டுகளை குவித்தனர்.

இன்னொரு பக்கம் 'விக்ரம்' திரைப்படத்தின் வசூல் மிகப் பெரிய ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.'விக்ரம்' திரைப்படம் ரிலீஸ் ஆன முதல் நாளே 40 கோடி ரூபாய் வசூலானது. 3 நாட்களில் 100 கோடி ரூபாய் வசூல் ஆனது.

அதன்பின் 8 நாட்களில் உலகம் முழுவதும் 200 கோடி ரூபாயை தாண்டிய இந்தப் படத்தின் வசூல் தற்போது இரண்டு வார முடிவில் 300 கோடி ரூபாய் என்ற அளவில் வசூலை தொட்டு உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

உலகநாயகன் கமலஹாசன் நடித்த திரைப்படம் ஒன்று 300 கோடி ரூபாய் வசூல் செய்வது இதுவே முதல் முறையாகும்.

ராஜபாளையம்



# இதுதான் 'திராவிட மொடல்' ஆட்சி

## திராவிடர் கழக தலைவர் கி. வீரமணி விளக்கம்

சமூக நீதி, சமூக நலனை மேம்படுத்துவதுதான் 'திராவிட மொடல்' ஆட்சி என்று ராஜபாளையத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் திராவிடர் கழக தலைவர் கி. வீரமணி உரையாற்றினார்.

திராவிடர் கழகம் சார்பில் மாநில உரிமை மீட்பு பொதுக்கூட்டம் ராஜபாளையத்தில் நடைபெற்றது. அந்த அமைப்பின் தலைவர் கி. வீரமணி தலைமை வகித்து, அங்கு மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது:

'திராவிட மொடல்' என்றால் என்ன? எனப் பலர் கேட்கின்றனர். 'திராவிட மொடல்' ஆட்சி என்பதற்கு ராஜபாளையம் நகராட்சி ஒரு சாட்சி. 42 கவுன்சிலர்களில் 22 பேர் பெண் கவுன்சிலர்கள். இதுவே திராவிட மொடல். சமூக நீதி, சமூக நலனை மேம்படுத்துவதுதான் திராவிட மொடல். தமிழகத்தில் நடைபெற்ற நகர்ப்புற உள்ளூராட்சித் தேர்தலில் பெண்களுக்கு அதிக அளவில் இடஒதுக்கீடு வழங்கப்பட்டு, இன்று தலைவர்களாகவும் கவுன்சிலர்களாகவும் ஏராளமான பெண்கள் இடம்பெற்றுள்ளனர். இதுதான் திராவிட மொடல். இவ்வாறு அவர் பேசினார்.

சென்னை

# இந்தியாவின் பொருளாதாரம் வேகமாக வளர்கின்றது

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி அதிகரித்தபடியே உள்ளது' என மத்திய நிதித்துறையின் செயலாளர் டி.வி. சோமநாதன் நிகழ்வொன்றில் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மின்சக்தி கூட்டணிக்கு தலைமை ஏற்று இந்தியா செயற்படுகிறது. யு.பி.ஐ என்ற வங்கிகளுக்கான அடையாள எண் வழங்குவதிலும் வெற்றி அடைந்துள்ளோம். நிதிப்பற்றாக்குறை, பொது செலவினங்களின் தரம், மானிய சீர்திருத்தம் போன்ற உள்நாட்டு சவால்களை சரிசெய்தல் அவசியம். நிதி பற்றாக்குறையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தால் பொது மக்களின் சேமிப்பு உயரும். ஆண்டுக்கு 6 முதல் 7 சதவீதம் வரை பொருளாதாரம் வளர்ச்சி அடைந்தால், பல்வேறு நாடுகளுக்கு முன்னோடியாக நாம் திகழ்வோம்.

நம் நாட்டு மக்களும் அனைத்து அமைப்புகளும் இணைந்து செயற்பட்டால், அமெரிக்காவின் வணிக மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றம்; ஜப்பானின் தரம் மற்றும் பணியிட நெறிமுறைகள்; ஜெர்மனியின் உற்பத்தித் திறன், ஸ்காண்டிநேவியாவின் தரமான வாழ்க்கை ஆகியவற்றை நம் நாட்டிலும் கொண்டு வர முடியும் என்றார்.

சென்னை

# உள்ளாடைக்குள் மறைத்து தங்கம் கடத்தல்

## இலங்கை பெண்கள் இருவர் சென்னையில் கைது

இலங்கையிலிருந்து விமானம் மூலம் கடத்தி வரப்பட்ட 47 இலட்சம் இந்திய ரூபாய் மதிப்புள்ள தங்கத்தை சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்து, இரண்டு பெண்கள் கைது செய்தனர்.

இலங்கையிலிருந்து சென்னை சர்வதேச விமான நிலையத்துக்கு சனிக்கிழமை (11) ஏர்இந்தியா மற்றும் இண்டிகோ ஏர்லைன்ஸ் பயணிகள் விமானங்கள் அடுத்தடுத்து வந்தன. அதில் வந்த இரண்டு இலங்கை பெண் பயணிகளிடம் சுங்கத்துறை



அதிகாரிகள் சந்தேகத்தின் பேரில் சோதனை நடத்தினர். அப்போது, அவர்களது உள்ளாடைகளுக்குள், தங்கப் பசையை மறைத்து வைத்து இருந்ததை கண்டுபிடித்தனர். அவர்களிடம் ஒரு கிலோ 20 கிராம் தங்கப்பசை இருந்தது. அதன் சர்வதேச மதிப்பு 47 இலட்சத்து 25 ஆயிரம் இந்திய ரூபாய் ஆகும். சுங்க அதிகாரிகள் இரண்டு இலங்கை பெண் பயணிகளையும் கைது செய்தனர்.



# குடும்பத்துடன் அமெரிக்க பயணம்

நந்தா, பிதாமகன் திரைப்படங்களை தொடர்ந்து மீண்டும் பாலா இயக்கத்தில் 18 ஆண்டுகளுக்கு பிறகு நடிக்கிறார் சூர்யா.

சூர்யாவுக்கு ஜோடியாக தெலுங்கு நடிகை கிர்த்தி ஷெட்டி நடிக்கிறார். மீனவர்களின் பிரச்சினையை மையமாகக் கொண்ட இந்தத் திரைப்படத்தில் சூர்யா மாற்றுத்திறனாளியாக நடித்து வருகிறார்.

முதற்கட்ட படப்பிடிப்பு கன்னியாகுமரியில் நடைபெற்ற நிலையில், அடுத்தபடியாக கோவாவில் ஒரு மாதம் நடைபெறுகிறது. இந்த நிலையில் விரைவில் சூர்யா தனது மனைவி குழந்தைகளுடன் அமெரிக்காவுக்கு ஒரு வாரம் சுற்றுப்பயணம் செல்ல இருப்பதாக கூறப்படுகிறது.

அவர் சென்னை திரும்பியதும் சூர்யா 41ஆவது திரைப்படத்தின் படப்பிடிப்பு கோவாவில் தொடங்குகிறது. இந்தத் திரைப்படத்தை முடித்ததும் வெற்றிமாறனின் வாடிவாசல், ஞானவேலின் புதிய திரைப்படம் என இரண்டு திரைப்படங்களில் அடுத்தடுத்து நடிக்கிறார் சூர்யா.



# பொன்னியின் செல்வனில் ஷாலினி?

பிரமாண்ட இயக்குநர் மணிரத்னம் இயக்கிவரும் 'பொன்னியின் செல்வன்' திரைப்படத்தில் ஏற்கெனவே இந்திய திரையுலகின் முன்னணி நட்சத்திரங்கள் நடித்து வருகின்றனர்.

இந்த நிலையில், மிகப்பெரிய நட்சத்திர கூட்டமே நடித்துள்ள இந்த திரைப்படத்தில் ஒரு முக்கிய கேரக்டரில் ஷாலினி அஜித் நடித்துள்ளதாகவும் அவரது கேரக்டர் இதுவரை ரகசியமாக வைக்கப்பட்டு இருந்ததாகவும் சமூக வலைத்தளங்களில் ஒரு செய்தி வைரலாகி வருகிறது.

ஆனால் இதுகுறித்து விளக்கமளித்த அஜீத்தின் மேனேஜர், 'பொன்னியின் செல்வன்' திரைப்படத்தில் ஷாலினி அஜித் நடிப்பதாக வெளியான தகவலில் உண்மை இல்லை என்றும் இது முற்றிலும் தவறான தகவல் என்றும் ' பொன்னியின் செல்வன்' உள்பட எந்தத் திரைப்படத்திலும் ஷாலினி அஜித் நடிக்கவில்லை என்றும் கூறியுள்ளார்.

இதனை அடுத்து 'பொன்னியின் செல்வன்' திரைப்படத்தில் ஷாலினி அஜீத் நடித்துள்ளார் என்பது முழுக்க முழுக்க வதந்தி என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

மணிரத்னம் இயக்கத்தில் கடந்த 2000ம் ஆண்டு வெளியான 'அலைபாயுதே' என்ற திரைப்படத்தில் ஷாலினி அஜீத் நடித்து இருந்தார்.



இலங்கை எதிர் அவுஸ்திரேலியா:

# ODI தொடர் இன்று ஆரம்பிக்கிறது

இலங்கை, அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரானது, பல்லேகலவில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.

இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரில் இலங்கையணியின் துடுப்பாட்டமானது சோபிக்காத நிலையில், இத்தொடரில் இலங்கை சிறப்பாகச் செயற்பட வேண்டுமாயினும் பெருமளவு முன்னேற்றத்தை இலங்கை காண்பிக்க வேண்டியுள்ளது.

குறிப்பாக குசல் மென்டிஸ், தனஞ்சய டி சில்வா, பதும் நிஸங்க உள்ளிட்டோர் நீண்ட நேரம் நிலைத்து நின்று துடுப்பெடுத்தாடுவது அவசியமாகின்றது. பந்துவீச்சைப் பொறுத்த வரையில் வனிடு ஹஸரங்க, மகேஷ் தீக்‌ஷனவோடு தனஞ்சய டி சில்வா சுழற்பந்துவீச்சுக்கு பலம் சேர்க்கையில் துஷ்மந்த சமீர, அசித பெர்ணாண்டோ ஆகியோரிடமே வேகப்பந்துவீச்சு தங்கியுள்ளது.



மறுபக்கமாக காயம் காரணமாக மிற்செல் ஸ்டார்க், மிற்செல் மார்ஷ், கேன் றிச்சர்ட்ஸனை அவுஸ்திரேலியா இழந்துள்ள நிலையில் ஜொஷ் ஹேசில்வூட், பற் கமின்ஸ், அஸ்தன் அகர் என ஓரளவு சவாளிக்கக் கூடிய வகையிலேயே அவுஸ்திரேலியாவின் பந்துவீச்சு வரிசை காணப்படுகின்றது.

துடுப்பாட்டத்தைப் பொறுத்த வரையில் ஆரோன் பின்ஞ், டேவிட் வோர்னர், அலெக்ஸ் காரி, ஸ்டீவ் ஸ்மித், மர்னுஸ் லபுஷைன் எனப் பலமானதாகவே அவுஸ்திரேலியா காணப்படுகின்றது.



நியூசிலாந்துக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

## இங்கிலாந்தும் ஓட்டங்களைக் குவிக்கிறது

நியூசிலாந்துக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் இங்கிலாந்தும் ஓட்டங்களைக் குவித்து வருகின்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், நொட்டிங்ஹாமில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்த இந்த டெஸ்டின் நேற்று முன்தின மூன்றாம் நாள் ஆட்டத்தை தமது முதலாவது இனிங்ஸில் ஒரு விக்கெட்டை இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த இங்கிலாந்து, 67 ஓட்டங்களுடன் அலெக்ஸ் லீஸை மற் ஹென்றியிடம் இழந்தது.

அதைத் தொடர்ந்து ஜோடி சேர்ந்த ஒலி போப்பும், ஜோ றூட்டும் ஓட்டங்களைக் குவித்த நிலையில், போப் 145 ஓட்டங்களுடனும் அடுத்து வந்த ஜொனி பெயார்ஸ்டோவும் ட்ரெண்ட் போல்டிடம் வீழ்ந்தனர்.

இதையடுத்து களம்புகுந்த அணித்தலைவர் பென் ஸ்டோக்ஸ் அதிரடியாக 46 ஓட்டங்களைப் பெற்றதோடு மிஷெல் பிறேஸ்வெல்லிடம் வீழ்ந்த நிலையில், நேற்று முன்தின மூன்றாம் நாள் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 473 ஓட்டங்களை நியூசிலாந்து பெற்றுள்ளது.

தற்போது களத்தில் றூட் ஆட்டமிழக்காமல் 163, பென் போக்ஸ் ஆட்டமிழக்காமல் 24 ஓட்டங்களைப் பெற்றவாறு காணப்படுகின்றனர்.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

நியூசிலாந்து: 553/10 (துடுப்பாட்டம்: டரைல் மிற்செல் 190, டொம் பிளன்டெல் 106, மிஷெல் பிறேஸ்வெல் 49, வில் யங் 47, டெவோன் கொன்வே 46, ஹென்றி நிக்கொல்ஸ் 30, டொம் லேதம் 26 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜேம்ஸ் அன்டர்சன் 3/62, பென் ஸ்டோக்ஸ் 2/85, ஸ்டூவேர்ட் ப்ரோட் 2/107, ஜேக் லீச் 2/140, மத்தியூ பொட்ஸ் 2/85)

இங்கிலாந்து: 473/5 (துடுப்பாட்டம்: ஜோ றூட் ஆ.இ 163, ஒலி போப் 145, அலெக்ஸ் லீஸ் 67, பென் ஸ்டோக்ஸ் 46, பென் போக்ஸ் ஆ.இ 24 ஓட்டங்கள். பந்துவீச்சு: ட்ரெண்ட் போல்ட் 3/89, மிஷெல் பிறேஸ்வெல் 1/48, மற் ஹென்றி 1/128)

இரண்டாவது இருபதுக்கு 20 சர்வதேச போட்டியிலும்

## இந்தியாவை வீழ்த்திய தென்னாபிரிக்கா

இந்தியாவுக்கெதிரான ஐந்து போட்டிகள் கொண்ட இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரில், கட்டாக்கில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இரண்டாவது போட்டியிலும் தென்னாபிரிக்கா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: தென்னாபிரிக்கா

இந்தியா: 148/6 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஷ்ரேயாஸ் ஐயர் 40 (35), இஷன் கிஷன் 34 (21), தினேஷ் கார்த்திக் ஆ.இ 30 (21) ஓட்டங்கள். பந்துவீச்சு: ககிஸோ றபாடா 1/15 [4], வெய்ன் பார்னல் 1/23 [4], கேஷவ் மஹாராஜ் 1/12 [2])

தென்னாபிரிக்கா: 149/6 (துடுப்பாட்டம்: ஹென்றிச் கிளாசென் 81 (46), தெம்பா பவுமா 35 (30), டேவிட் மில்லர் ஆ.இ 20 (15) ஓட்டங்கள். பந்துவீச்சு: புவ்னேஷ்வர் குமார் 4/13 [4], ஹர்ஷால் பட்டேல் 1/17 [3], ஆவேஷ் கான் 0/17 [3])

போட்டியின் நாயகன்: ஹென்றிச் கிளாசென்

இந்நிலையில், இரண்டு அணிகளுக்குமிடையிலான மூன்றாவது போட்டியானது விசாகப்பட்டினத்தில் இன்றிரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது.



திருகோணமலை 40 வயதுக்கு மேற்பட்டோருக்கான கால்பந்தாட்டத் தொடர்:

## சம்பியனான றிங்கோ போயிஸ் விளையாட்டுக் கழகம்

எப். முபாரக்

திருகோணமலையில் நடத்தப்பட்ட 40 வயதுக்கு மேற்பட்டோருக்கான கால்பந்தாட்டத் தொடரில் றிங்கோ போயிஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் ஜமாலியா விளையாட்டுக் கழகத்தை வென்றே றிங்கோ போயிஸ் சம்பியனாயிருந்தது.

சம்பியனான றிங்கோ போய்ஸுக்கு வெற்றிக் கிண்ணமும் 50,000 ரூபாய் பணப் பரிசும், இரண்டாமிடம் பெற்ற ஜமாலியாவுக்கு வெற்றிக் கிண்ணமும் 25,000 ரூபாய் பணப்பரிசும் வழங்கப்பட்டது.



தாய்லாந்து

# கஞ்சா அனுமதி

தாய்லாந்தில் மருத்துவ பயன்பாட்டிற்காகவும், விவசாயம் மற்றும் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்குடனும் கஞ்சாவினைப்பயன்படுத்த சட்டபூர்வ அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தாய்லாந்தின் சுகாதாரத் துறை அமைச்சர் அனுடின் சார்ன்விரகுல், கருத்துத் தெரிவிக்கையில், “கஞ்சாவை சட்டப்பூர்வமாக உற்பத்தி செய்வது குற்றமில்லை. நாட்டின் பொருளாதாரத்தைக் கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

எனினும் பொழுதுபோக்கிற்காகவே அல்லது பொது இடத்தில் பிறருக்கு பிரச்சினை தரும் வகையிலோ கஞ்சாவை பயன்படுத்த நினைத்தால் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

அதேநேரம் போதைக்காக கஞ்சாவை பயன்படுத்துவது சட்டவிரோதமானது என்பதையும் தாய்லாந்து அரசு உறுதிபடுத்தியுள்ளது.



மேலும் கஞ்சாவை போதைக்காக பயன்படுத்தினால், பொது சுகாதாரச் சட்டத்தின் கீழ் மூன்று மாதங்கள் வரை சிறைத்தண்டனை மற்றும் பொது இடங்களில் கஞ்சா புகைப்பதற்காக 800 டொலர் அபராதம் விதிக்கப்படும் என அந்நாட்டு சுகாதாரத்துறை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



இஸ்ரேல்

## உலக கண்களை ஈர்த்த கமெரா

இஸ்ரேலில் உருவாக்கப்பட்டுள்ள ‘Camero-Tech Xaver 1000’ என்ற கமெரா உலக நாடுகளின் கவனத்தை வெகுவாக ஈர்த்துள்ளது.

இஸ்ரேலைச் சேர்ந்த கமெரோ-டெக் நிறுவனம் உருவாக்கிய குறித்த கமெராவானது 3D ‘சென்ஸ்-த்ரூ-தி-வால்’ திறனைக் கொண்டுள்ளது. இவற்றைக் கொண்டு 100 மீற்றர் தூரம் வரை சுவர்கள் மற்றும் தடைகளுக்குப் பின்னால் உள்ளவற்றை பார்க்க முடியும்.

தடைகளுக்குப் பின்னால் உள்ள மனிதர்களோ பொருட்களோ, அவற்றின் உயரம், அளவு, நிற்கிறதா நகர்கிறதா என்பது குறித்தும் துல்லியமாக கண்டறிய முடியும். இத் தொழில்நுட்பம் முற்றிலும் கதிர்வீச்சு அற்றது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இஸ்ரேலின் இராணுவப் படைகள், சட்ட அமலாக்கத் துறையினர், புலனாய்வு பிரிவுகள் போன்றவற்றுக்கான செயற்திறன் இதன் மூலம் அதிகரிக்கும் எனவும் கூறப்படுகின்றது.

நெதர்லாந்து

## காரை இயக்கும் கதிரவன்

### அசத்துகிறது நெதர்லாந்து நிறுவனம்

மின்சாரமின்றி சூரிய சக்தியில் நாளொன்றுக்கு 70 கிலோ மீற்றர் தூரம் செல்லக் கூடிய சோலார் காரை நெதர்லாந்தை சேர்ந்த ‘லைட் இயர்’ என்ற மின்சாரக் கார் தயாரிப்பு நிறுவனம் உருவாக்கி சாதனை படைத்துள்ளது.

‘லைட் இயர் வன்’ என அழைக்கப்படும் குறித்த காரின் மேற்பகுதி மற்றும் பேனட் பகுதியில், 5 சதுர மீற்றர் சுற்றளவுக்கு பொருத்தப்பட்டுள்ள சோலார் பேனல்கள், காரை இயக்குவதற்குத் தேவையான சூரிய சக்தி ஆற்றலை உருவாக்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அதிகபட்சமாக 160 கிலோ மீற்றர் தூரம் வரை செல்லும் இக்காரானது, இயக்கிய பத்தாவது செக்கனிலேயே 100 கிலோ மீற்றர் வேகத்தை எட்டிவிடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இக்காரானது இலங்கை மதிப்பில் 9.27 கோடி ரூபாய் வரை விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாகவும், விரைவில் சந்தைக்கு வரவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனா

## ஜன்னலை மூட சீனா உத்தரவு

சீனாவும் வடகொரியாவும் அண்டை நாடுகளாக உள்ள நிலையில், இரு நாடுகளிலும் தற்போது கொரோனாத் தொற்று பரவல் தீவிரமடைந்து வருகின்றது.



இதன் காரணமாக இருநாடுகளிலும் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், வட கொரியாவில் இருந்து கொரோனாத் தொற்று காற்று மூலமாகக் கூடப் பரவும் அபாயம் உள்ளதாகத் தெரிவித்துள்ள சீன அரசு, எல்லையில் உள்ள நகரங்களில் வித்தியாசமான கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றது.

அதாவது, டேன்டோங் என்ற எல்லை நகரத்தில் உள்ள மக்களை அவர்கள் வீட்டு ஜன்னல்களை திறக்காமல் மூடியே வைத்திருக்க வேண்டும் எனவும் அப்பகுதியில் வசிப்பவர்கள் தொடர்ச்சியாக பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தியுள்ளது.

குறித்த நகரத்தில் சுமார் 20 இலட்சம் மக்கள் வசித்து வரும் நிலையில், தற்போது 850க்கும் மேற்பட்டோருக்கு கொரோனாப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக சீன அரசு தெரிவித்துள்ளது.

ரஷ்யா

## புதிய பெயரில் மெக்டொனால்ட்ஸ்

உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி உக்ரேன் மீது, கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக ரஷ்யா போர் தொடுத்து வருகின்றது. இந்நிலையில் உக்ரேன் மீதான ரஷ்யாவின் தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், அண்மையில் ரஷ்யாவை விட்டு மெக்டொனால்ட்ஸ் நிறுவனம் வெளியேறியது.

இதனையடுத்து ரஷ்யாவில் அந்நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக செயற்பட்ட அலெக்சாண்டர் கோவர், அங்குள்ள 850 மெக்டொனால்ட்ஸ் உணவகங்களை நடத்தும் காப்புரிமையைப் பெற்றார்.

அத்துடன் ‘Vkusno & Tochka’ என்ற பெயரில் நேற்று முன்தினம் (12) முதல் குறித்த உணவகங்கள் இயங்கத் தொடங்கியுள்ளன.

தலைநகர் மொஸ்கோவில், முதல் உணவகத்தைத் திறந்து வைத்த கோவர், இதற்கு முன் பரிமாறப்பட்ட அதே உணவு வகைகள் இனி புதிய பெயர்களில் பரிமாறப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.




வடகொரியா

## புட்டினுக்கு உன் வாழ்த்து

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுக்கு, வட கொரிய ஜனாதிபதி கிம்ஜொங் உன், சிறப்பு வாழ்த்துச் செய்தியை அனுப்பியுள்ளமை உலக நாடுகள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

‘ரஷ்ய தினம்’ 1992 முதல் வருடந்தோறும் ஜூன் 12 அன்று கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்நிலையில் உக்ரேன் மீது ரஷ்யா தொடுத்துள்ள தாக்குதல் 3 மாதங்களைக் கடந்து நீடித்து வரும் நிலையில், ரஷ்ய மக்கள் தங்கள் இலக்குகளை நிறைவேற்றுவதில் பெரும் வெற்றியை அடைந்துள்ளனர் என, வட கொரிய ஜனாதிபதி கிம்ஜொங் உன் பாராட்டியுள்ளார்.



அத்துடன், “ரஷ்யா தன் நாட்டின் கண்ணியத்தையும் பாதுகாப்பையும் பாதுகாக்கும் முறைகளை நன்கு அறிந்துள்ளது. இதன் காரணமாக, ரஷ்யாவால் தன் இலக்கை அடைவதில் பெரும் வெற்றியைப் பெறமுடிந்தது. வடகொரிய மக்கள் ரஷ்யமக்களுக்கு முழுஆதரவு மற்றும் ஊக்கத்தை வழங்குவர் எனவும் அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், உலக பாதுகாப்பை உறுதிசெய்யவும், சர்வதேச நீதியைப் பாதுகாப்பதற்கான பயணத்திலும் இருநாடுகளுக்கும் இடையேயான இராஜாங்க ஒத்துழைப்பு நெருக்கமாக இருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் செவ்வாய்க்கிழமை, 14 ஜூன் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.